
# ஜாமக்காரன்

WATCHMAN

காவல்காரன்



(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே!**

**இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.**

அநேக ஆண்டுகளாக ஏராளமானவர்கள் ஜாமக்கரான் பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் வெளியிடவேண்டும் என்று ஏழுதிக்கொண்டேயிருந்தார்கள். அவர்கள் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கியும், தமிழ்-மலையாளம் ஆகிய இரண்டு மொழிகளில் ஜாமக்காரனை ஏககாலத்தில் மாதாமாதம் வெளியிடவேண்டும் என்ற அரசாங்க அறிவிப்பின்படியும் ஏப்ரல் மாதம்முதல் ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரனை வெளியிட தொடங்கிவிட்டோம். இது தொடரும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். பணம் பிரச்சனையேயல்ல!, **மலையாளம்** எனக்கு எழுத,படிக்க தெரியது. ஆகவே மலையாள **மொழிபெயர்ப்புக்கு** ஒவ்வொருமாதமும் நான் அலைய வேண்டியிருப்பதால் **தமிழும்-மலையாளமும்** ஏககாலத்தில் வெளியிட முடியாதிருந்தது. இப்போதும் அதே அலைச்சல் தான்தொடரும் என்றாலும் வாசகர்களின் பல ஆண்டு அன்பு வேண்டுகோள் நிறைவேற்ற கூடுதல் அலைச்சலை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். சேலம்-ஈரோடு-கோயமுத்தூர்-வெல்லூர் ஆகிய ஊர்களில் **தமிழும்-மலையாளமும்** அறிந்தவர்கள் யாரையாவது இதை வாசிக்கிற உங்களில் யாருக்காவது தெரிந்தால் எனக்கு அறிவிக்கவும். மொழிபெயர்ப்புக்கு உதவியாக இருக்கும்.

## இமயமலை குலுங்கியது:

‘ **நேபாளத்தில்**ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் இதுவரை உலக நாடுகள் எதுவும் அனுபவிக்காத பேர் அழிவு உலக நாடுகளை கவனிக்க வைத்தது. உலகத்திலேயே **இந்துமத தேசமாக** அறியப்பட்ட ஒரே நாடு **நேபாளமாகும். இந்தியா** இந்து தேசமல்ல அது **சிந்துதேசம்.** சிந்து என்பது மருவி **இந்து** என்று அழைக்கப்படலாயிற்று. அதனால் வேதத்தை மொழிபெயர்த்தவர்கள்கூட எஸ்தர் புத்தகத்தில் முதல் அதிகாரத்தில் **இந்துதேசம்** என்றே மொழிபெயர்த்திருக்கின்றனர்.

‘ **நேபாளம்**மன்னர்ஆட்சியிலிருந்த காலத்தில் IEM மிஷனரி கிறிஸ்துவை நேபாளத்தில் அறிவித்ததால் அவரை சிறையில் அடைத்தார்கள். பலஆண்டுகள் கழித்துதான் அவரை சிறையிலிருந்து வெளிகொண்டுவர முடிந்தது. அவருடைய பிள்ளைகள் இரண்டுபேரை நான்தான் டோனாவூரில் சேர்த்து அவர்களுக்கு பணம்அனுப்பி அவர்கள்அங்குபடிக்க ஏற்பாடுகளை செய்தேன்.

# மே 2015

நேபாளத்தில் சுவிசேஷம் அறிவித்தால் கடினமான தண்டனைகளை அனுபவிக்கவேண்டும் என்று அரசாங்கம் கிறிஸ்தவ ஊழியர்களை எச்சரித்தது. ஆனால் இப்போது அந்த தடைசட்டம் தளர்த்தப்பட்டு பல்வேறு இடங்களில் கிறிஸ்தவ சபைகள் நேபாளத்தில் எழும்பியுள்ளன. இங்கு வீதி ஓரங்களில் எல்லாம் **சிவலிங்கம்** பதிக்கப்பட்டிருப்பதை காணலாம். இமயமலையை இருப்பிடமாக கொண்ட இந்துமத தெய்வமான சிவன் தலையிலிருந்து கங்கை உற்பத்தியாகுவதுபோல கதைகள் உண்டு. பொதுவாக இமயமலை பிரதேசம் முழுவதும் சிவன் வசிக்கும் இடம் என்று இந்துமத மக்களால் மதிக்கப்படுகிறது.

‘ இந்த பூகம்பம் நேபாள தேசத்தையே தலைகீழ் ஆக்கிப்போட்டது. இதுவரை கட்டிட இடிபாடுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட உடல்கள் மட்டும் 10000பேருக்கு மேல்இருக்கும் என்று செய்திகள் கூறுகிறது. சுற்றுலா வந்த 4000 அமெரிக்கர்களின் உடல்கள் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. காணமல் போனவர்களின் எண்ணிக்கை லட்சத்துக்கு அதிகமாக கூறப்படுகிறது. **நேபாளத்தின்** ஜனத்தொகை 3கோடியாகும். இதில் 8 லட்சம் பேர் வீடிழந்துள்ளனர். அங்கு தொடர்ந்து பூமி அதிர்ந்து கொண்டேயிருப்பதால் எட்டு லட்சமக்கள் திறந்த வெளி மைதானங்களில் குளிருக்கு போர்த்தி கொள்ள கம்பளி போன்ற போர்வைகூட இல்லாமல் சிலர் நீண்ட வாசல்கதவுகளை தங்கள்மேல் போட்டு படுத்து கிடக்கும் வேதனையான படங்களை காணும்போது மனம் மிகவும் வேதனையடைகிறது. உலக நாடுகளிலிருந்து ஏராளமான உதவிகள் வந்த வண்ணம் இருக்கிறது. ஆனால் அது போதவில்லை.

‘ மே மாதம் 5,6ம் தேதிகளில் மட்டும் 200 பெண்களுக்கு பிரசவம் உண்டாகும் என்று எதிர்ப்பார்த்து அவர்கள் அனைவரையும் 13 கூடாரங்களில் படுக்கவைத்து வெளிநாட்டு டாக்டர்களும்,நர்சுகளும் இரவும்-பகலும் கவனித்து கொண்டிருக்கிறார்கள்.

‘ இந்தமுறை பூமியதிர்ச்சி இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு வரை உணரப்பட்டது. கேரளா மாநிலத்தில் எர்ணாகுளம் மாவட்டத்தில் அதிக அளவு பூமியதிர்ச்சி உணரப்பட்டது என்றார்கள்.

‘ கடைசி காலம் அடையாளமாக பூமியதிர்ச்சியை குறித்து பிரசங்கிக்கபட்டாலும் இயேசுகிறிஸ்து மத் 24ம் அதிகாரத்தில் உலக முடிவுக்கு அடையாளமாக எச்சரிக்கை செய்த நாட்களிலேயே கடைசிகாலம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. சொல்லப்பட்ட பூமியதிர்ச்சி இயேசுகிறிஸ்துவின் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. நாம் யாவரும் முக்கியமாக அறியவேண்டியது. வாசகர்கள் யாவரும் நாம் வாழும் எல்லா நாளும் உலக முடிவுக்கும்,கிறிஸ்துவின் வருகைக்கும் நம்முடைய மரணத்துக்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

‘ இதில் வாசகர்கள் அறியவேண்டியது என்னவென்றால், **ஜெபத்தில் பெயர் அழைக்கும் நம் நாட்டு கள்ளதீர்க்கதரிசிகள்** எல்லாரும் உலக நாடுகளைப்பற்றி வருடாவருடம் **தீர்க்கதரிசனம்** கூறினார்கள் அல்லவா!. ஆனால் **நேபாளத்தில் இத்தனை பெரிய அழிவும்,பூமியதிர்ச்சியும்** வரும் என்று இவர்களில் ஒருவராவது கூறினார்களா? என்பதை கவனித்து இப்படிப்பட்ட ஊழியர்களிடம் நீங்கள் வைக்கும் நம்பிக்கை சரியானதுதானா என்பதை புனர்பரிசோதனை செய்துக்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட **பொய் தீர்க்கதரிசிகளிடம்** இனியாவது எச்சரிக்கையாக இருங்கள்.

## கிறிஸ்மஸ் நாள் விடுமுறை


‘ **கிறிஸ்மஸ்** நாட்கள் இனி விடுமுறை இல்லை-முன்னாள் பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களின் நல்ல சேவைகளை நினைவுகூறும் தினமாகவும்,நல்ல ஆட்சியாளர்களைக்குறித்து கிறிஸ்மஸ் தினத்தில் அனைத்து பள்ளிகளும் விடுமுறையின்றி அந்த நாளை பிள்ளைகள் கட்டுரை எழுதும் நாளாக மாற்றவேண்டும் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டபோது கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, மற்ற சிறுபான்மையினரும் இது நியாயமற்றது வேண்டுமென்றே கிறிஸ்தவ சிறுபான்மையினரை அழிக்க நினைக்கும் அறிவிப்பாகும் என்றெல்லாம் எதிர்ப்பு எழுந்தவுடன் **கிறிஸ்மஸ்** தினம் விடுமுறை இல்லை என்பதை நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. அந்த

**தினத்தில் பள்ளிக்கூடம் நடத்த விரும்புபவர்கள் நடத்தலாம். விரும்பாதவர்கள் விடுமுறை அறிவிக்கலாம் என்று செய்தி வெளிவந்தது.**

## அடுத்த அதிர்ச்சி செய்தி:
## (பெரிய வெள்ளிகிழமை பிரதமர் வைத்த விருந்து)

‘ **கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான இயேசுகிறிஸ்து மானிட வர்க்கத்தினர் அனைவருக்கும் வேண்டி சிலுவையில் மரித்த தினமான (Good Friday) பெரிய வெள்ளிகிழமையன்று நம் இந்திய பிரதமர் திரு.மோடி அவர்கள் உச்சநீதிமன்றம்,உயர்நீதிமன்றம் நீதிபதிகளுக்காக விசேஷ விருந்து ஆயத்தப்படுத்தி அழைப்பு கொடுத்தார். அப்படியே ஈஸ்டர்வரை தலைமை நீதிபதிகளுக்கு விசேஷ ஆலோசனை கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டது.**

‘ **விருந்து சாப்பிடவும், ஆலோசனை கூட்டங்கள் நடத்தவும் கிறிஸ்தவர்களுக்கு என்று உள்ள மிக முக்கிய விடுமுறை தினமான இந்த மூன்று நாட்களில்தான் விருந்தும்,கூட்டமும் நடத்தவேண்டுமா?.**



Justice
Kurien Joseph

‘ **ஒரே ஒரு கிறிஸ்தவ உச்சநீதிமன்ற(சுப்ரீம் கோர்ட்)நீதிபதிகுரியன் ஜோசப்(Justice Kurien Joseph)அவர்கள்மட்டும் பிரதமரின் விருந்திலும்,நீதிபதிகள் ஆலோசனை கூட்டத்திலும் பங்குபெற இயலாது என்று தைரியமாக அறிவித்து** Good Friday **நாளில் விருந்து வைத்ததும்,மீட்டிங் நடத்தியதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.**

‘ **மேலும்,அவர் நான் கிறிஸ்தவன்,கிறிஸ்தவர்களுக்கென்று மிக முக்கிய நினைவுகூறும் விசேஷதினமான** Good Friday**என்ற நாள் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நினைவு கூறுவதாகும். இந்த நாளில் கிறிஸ்தவர்கள் ஆகாரம் சாப்பிடாமல் கிறிஸ்துவின்பாடு மரணங்களைக்குறித்து தியானிப்பார்கள். உலகத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் அனுஷ்டிக்கும் இப்படிப்பட்ட** Good Friday **என்ற நாளில் விருந்துக்கு ஏற்பாடு செய்தது, ஆகாரம் சாப்பிடாமல் தியானிக்கும் கிறிஸ்தவர்களின் உணர்வை விருந்து கொடுத்து காயப்படுத்தும் செயலாகும் என்ற அர்த்தத்தில் அந்த கிறிஸ்தவ உச்சநீதிமன்ற நீதிபதி.குரியன் ஜோசப் அவர்கள் பிரதமர் விருந்தில் கலந்துக்கொள்ள இயலாது என்று கூறிவிட்டார். சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிக்கும்** Good Friday**யில் நடத்தப்படும் நீதிபதிகளின் முக்கிய ஆலோசனை கூட்டத்திலும்தான் பங்குக்கொள்ள இயலாது என்று வெளிப்படையாக தைரியமாக எழுதி அறிவித்தது பொதுமக்கள் மத்தியிலும், குறிப்பாக** BJP **அரசியல்வாதிகள் மத்தியிலும் பெரும் சலனம் உண்டாக்கிவிட்டது.**

‘ **பல கிறிஸ்தவ நீதிபதிகள்,அதிகாரிகளுக்கு இவரின் பகிரங்க அறிக்கை பெரும்சவாலாகவும், சாட்சியாகவும் அமைந்தது. இப்படிப்பட்ட உயர்மட்ட பதவியில் இருப்பவர்களுக்காகவும்,** Good Friday **தினத்தில் விருந்து வைத்த பிரதமருக்காவும் ஜெபிப்போம். பிரதமர் கொடுத்த விருந்து கிறிஸ்தவ மக்களின் மனதை காயப்படுத்தும் விருந்தாகும். பிரதமருக்காக ஜெபிப்போம்.**

‘ **10,11,12 வகுப்பு பரீட்சை எழுதி பாஸான நம் வாசகர்களின் பிள்ளைகளுக்காக வாழ்த்துதல் கூறுகிறேன். இனி அவர்களின் மேல்படிப்புக்காக ஜெபிப்போம்.**

‘ **2015 ஜனவரி தொடங்கி இதுவரை நடந்த எல்லா ஊழியங்களுக்கும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நடந்த எல்லா கூட்டங்களிலும் கர்த்தர் அபரிதமான ஆசீர்வாதத்தை பொழிந்தருளினார். ஜெபித்த உங்களுக்கும் நன்றி கூறுகிறேன்.**

‘ **கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது** என்ற வேத வசனம் **உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேறுவதாக.**

' **ஆன்-லைனில்** காணிக்கை அனுப்பகிறவர்கள் தயவுசெய்து உங்கள் **விலாசம், தொலைபேசி** எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள். மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.

' **2015 ஜீன் மாதம் இந்தியாவின் இமயமலை அடிவாரத்துக்கு ஊழியம்** செய்ய போகிறேன். கர்த்தர் என்னோடுகூட இருக்கிறார். ஜெபியுங்கள். தொடர்ந்து உங்கள் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன்.

கர்த்தரின் உன்னத பணியில்

**டாக்டர். புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வாசகர் கடிதம்

**கடிதம் 1:** நீங்கள் திருகாட்டுப்பள்ளியில் பேசின பிரசங்கங்கள் வேதாகம போதனைகள் யாரும் எடுத்துச்சொல்லாத வகையில் மிக எளிமையாக ஆழமாக அதே சமயம் ஆணித்தரமாக எல்லாரும் விளங்கிக்கொள்ளும் வகையில் இருந்தது.

- **திருமதி.இசபெல்லா கருணாகரன்**. திருவாயூர்


❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கடிதம் 2:** நீங்கள் ஆடாமல்,அசையாமல் சுமார் **இரண்டு மணிநேரம்** ஒரே இடத்தில் நின்றவாரே பேசியது எங்கள் யாவருக்கும் ஆச்சரியம். பிரசங்கம் கேட்க வந்த மைதானத்தில் உள்ளவர்களையும் **ஆடாமல் அசையாமல்** உங்கள் பிரசங்கத்தை இரண்டு மணிநேரம் கேட்க நீங்கள் மக்களை உட்கார வைத்தது பெரும் ஆச்சரியம். இதற்கு முன் நடந்த பல கூட்டங்களில் கூட்டங்களின் நடுவே மக்கள் எழுந்துபோவதும், திரும்பவந்து உட்காருவதுமாக இருந்ததை கண்டிருக்கிறோம். ஆனால் உங்கள் கூட்டம் மிக அற்புத அனுபவமாகும். ஆவியானவர் எங்களை வசனத்தில் கட்டி உட்கார வைத்துவிட்டார். எங்கள் சபைக்கு அன்றைய சூழ்நிலையில் வேண்டிய செய்தியை கர்த்தர் உங்கள்மூலம் அறிவித்தது மற்றொரு அதிசயம் ஆகும். கர்த்தர் உங்களுக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அருளி ஆசீர்வதிக்க எங்கள் தினசரி ஜெபத்தில் ஜெபிப்போம் என்று உறுதியளிக்கிறோம். : **............விக்கிரமசிங்கபுரம்**

## கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் **கிறிஸ்தவசபைகள்** தாக்கப்படுகின்றன. **சபை ஊழியர்கள், மிஷனரிகள்** தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, **மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள்** என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில்செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து UNITED CHRISTIAN FORUM என்ற பெயரில் **உதவி இணைப்பு** Help Line தொடங்கியுள்ளார்கள். உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் **1800 2084 545** என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.

# CSI மத்திய கர்நாடகா திருமண்டலத்துக்கு
# CSI CENTRAL KARNATAKA DIOCESE
# புதிய பிஷப் (NEW BISHOP)



பெங்களூர் CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப்பாக பொருப்பேற்ற **Rt.Rev.பிரசன்னகுமார் சாமுவேல்** அவர்களை வாழ்த்துகிறோம்.

Rt.Rev.**பிரசன்னகுமார் சாமுவேல்** அவர்கள் **பிஷப்** பேனலில் ஜெயித்து சுமார் **இரண்டு ஆண்டுகள்** கழித்து தான் பிஷப்பாக அபிஷேிக்கப்பட்டார். பிஷப்பாக பொருப்பெடுப்பாரா அல்லது வேறு நபர் பிஷப்பாக வருவாரா என்றெல்லாம் **பெங்களூர் CSI மக்களும்**, மற்ற எல்லா மாநிலங்களிலும் உள்ள CSI மக்களும் வெகுபாரத்துடன் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தனர். **ஒரு தமிழர்** கர்நாடகா CSI டையோசிஸ்ஸில் பிஷப்பாக வருவது அங்குள்ள கன்னடபாஷை பேசும் மக்களில் சிலருக்கும், சில ஆயர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பிரியமில்லை. மேலும் **Rev.பிரசன்னகுமார்** அவர்கள் கை சுத்தம் உள்ளவரும் கண்டிப்பானவருமாகும். அதுபோல் அவர் மனைவியும் CSI பிஷப் காட்டன் பள்ளியில் **பிரின்சிபல்** பதவியில் உண்மையோடும், கண்டிப்போடும் இருப்பவர் ஆகும்.

CSI(Church of South India)யில் மொத்தம் 22 டையோசிஸ்கள் உண்டு. இதில் கர்நாடகா மாநிலத்தில் குறிப்பாக மத்திய கர்நாடகாவில் **பெங்களூரில்** உள்ள இந்த குறிப்பிட்ட டையோசிஸ்தான் தென் இந்தியா CSIயில் மிக அதிகம் வருமானம் கிடைக்கும் டையோசிஸ் ஆகும். கொளுத்த பணம் புரளும் கல்வி ஸ்தாபனங்களும், அதிக பணம் மதிப்புள்ள டையோசிஸ் சொத்துக்களும் நிறைந்த டையோசிஸ் ஆகும். அதனால்தான் இந்த பதவிக்கு இத்தனை போட்டிகளும்,தடைகளும் ஏற்பட்டது.

கடந்த முறை CSI மாடரேட்டரும்,பெங்களூர் பிஷப்புமாக இருந்தவர் கல்லூரி,பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி போன்றவைகள் மூலமாக கிடைத்த **டொனேஷன்**மூலம் வந்த பணவரவுகளை தன் சொந்த பெயரில் உள்ள **பேங்க்** கணக்குக்குபோய் சேரும்படி செய்ததை கண்டுபிடித்து பிஷப் அவர்கள் அகப்பட்டதும், அதன் காரணமாக அவர்மேல் பல வழக்குகள் இப்போதும் நிலுவையில் உண்டு என்றும் கூறப்படுகிறது. ஆகவே பிஷப் பெயரில் பணம் சுரண்டும் பல பெரும் புள்ளிகள் இந்த டையோசிஸ்ஸில் உண்டு. அவர்கள்தான் பிஷப் தேர்தலில் ஜெயித்துவந்த **Rev.பிரசன்னகுமார்** அவர்களை பதவி ஏற்கமுடியாதபடி கன்னடம்-தமிழ் என்று பாஷை பிரச்சனைகளை முன்வைத்து அரசியல்வாதிகள் பலரை ஏவி ஊர்வலம் நடத்தி நீதிமன்றத்தில் தடைஉத்தரவு பெற ஏற்பாடுகளும் செய்து பிஷப் பதவி ஏற்ப்பை தடைசெய்து டையோசிஸ்ஸை ஸ்தாம்பிக்க வைத்தார்கள். CSI சினாடும் செய்வதறியாது நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாமல் குழம்பி நின்றது.

' அப்போது **CSI மாடரேட்டராக** பதவி வகித்தவரும் கன்னியாகுமரி **CSI** டையோசிஸ் பிஷப்புமான **Most.Rev.தேவகடாட்சம்** அவர்களுக்கு நான் சில ஆலோசனைக்கூறி சீக்கிரம் **பெங்களூர் பிஷப்** அபிஷேகத்தை நடத்த கேட்டுக்கொண்டேன். நான் மாடரேட்டருக்கு எழுதிய கடிதத்தில் இரண்டுவிதமான ஆலோசனைகளை அவருக்கு எழுதினேன்.



**Most.Rev.தேவகடாட்சம்**

1). **Rev.பிரசன்னகுமார்** அவர்களை பிஷப் ஆக்க கன்னடர்களின் எதிர்ப்புகள் உள்ள நிலையில் கர்நாடகா **போலீசோ,**கர்நாடகா **முதல்வரோ** பிஷப் அபிஷேக நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு கொடுக்கமாட்டார்கள். ஆகவே இந்த விஷயத்தில் கர்நாடகா **கவர்னர்** அவர்களின் பாதுகாப்பு உதவியைநாட மாடரேட்டர் பதவியில் உள்ள உங்களுக்கு அதிகாரம் உண்டு. கவர்னர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி அபிஷேக ஆராதனைக்கு பாதுகாப்பு கொடுக்கமுடியும். அப்படிப்பட்ட பாதுகாப்புகளோடு **பிஷப்** அபிஷேக ஆராதனையை நடத்தலாம்.

**அல்லது**

2). CSI **சினாட் அலுவலகத்திலேயே** பிஷப் பதவி ஏற்பு ஆராதனையை நடத்தலாம். இதற்கு முன் உதாரணமாக இப்போதுள்ள இலங்கை CSI பிஷப்பின் பதவிஏற்பை CSI சினாட் அறையில் வைத்து இரகசியமாக நடத்தின மாதிரி, எதிராளிகள் கோர்ட் தடை உத்தரவு வாங்குவதற்குள் சிலர் திருமணத்தை நடத்தி தாலிகட்டி முடித்துவிடுவதைப்போல், இலங்கை CSI **பிஷப் பதவி ஏற்பு** அபிஷேகமும் சினாட் அறையில்வைத்து ஒரே இரவில் நடந்ததே!. அதுபோல **Rev.பிரசன்னகுமார்** அவர்களின் விஷயத்திலும் நடத்தினால் என்ன? என்று மாடரேட்டர் அவர்களுக்கு எழுதினேன்.

இந்த இரண்டு ஆலோசனைகளையும் ஏற்காது. ஒருவேளை வேறு ஒருவரை பிஷப்பாக தெரிந்தெடுத்தால் அது CSIக்கு அவமானத்தை உண்டாக்கும், ஒரு முன் உதாரணமாக மாறும். அப்படி நடந்தால் அதன் பாதிப்பு **CSI சபை** எலக்ஷனில், **டையோசிஸ்** எலக்ஷனில், டையோசிஸ் **செகரட்ரி** எலக்ஷனில், **மாடரேட்டர்** எலக்ஷனிலும் இந்த பாதிப்பை அனுப்பவிக்க வேண்டிவரும் என்று எச்சரித்து எழுதினேன். தமிழ்-கன்னடம், மலையாளம்-கன்னடம்,தமிழ்-தெலுங்கு,தமிழ்-மலையாளம் என்று பாஷையின் அடிப்படையிலும் **நாடார்-வெள்ளாளர்-தலித்** என்ற **ஜாதி அடிப்படையிலும் பெரும்பான்மை ஜாதிகளின்** அடிப்படையில் எலக்ஷனில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நபரை மாற்றி வேறு ஒருவரை தெரிந்தெடுக்கும் பிரச்சனை எழும்பும். சபைக்குள் சமாதானம் நீங்கிப்போகும்- கூடவே இயேசுகிறிஸ்துவும் வெளியேறுவார். இப்படி நடக்காதபடி சீக்கிரம் **பிஷப் பதவிஏற்பு** விழாவை நடத்திவிடுங்கள் என்று எழுதினேன். வழமைபோல் மாடரேட்டரிடம் இருந்து பதில் இல்லை.



இவருக்கு அடுத்து இப்போது **மாடரேட்டராக** பதவிவகித்துவரும் **Most Rev.Dr. G.Dyvasirvadam** அவர்களுக்கும் நான் முன்பு எழுதிய பழைய கடிதத்தில் சில மாற்றங்களை உண்டாக்கி இவருக்கும் கடிதம் அனுப்பினேன். **அதுவும் கிணற்றில்இட்ட கல்லானது**. இப்படியாக பெங்களூர் டையோசிஸ்க்கு **பிஷப்** இல்லாது 21 மாதங்கள் நீண்டுபோயின.

நான் மாடரேட்டருக்கு எழுதின கடிதத்தின் ஒரு பகுதியை ஜாமக்காரனிலும் வெளியிட்டேன். பெங்களூரில் சிலர் மாடரேட்டருக்கு நான் இரண்டவதாக எழுதின ஆலோசனையை **Rev.பிரசன்னகுமார்** அவர்களிடம் கூறினார்கள். ஆனால் நேர்மையான குணமுடைய **Rev.பிரசன்னகுமார்** அவர்கள் குறுக்குவழியிலோ, இரகசியமாகவோ தன் **பதவிஏற்பு** ஆராதனையை நடத்த எனக்கு விருப்பமில்லை என்றும், எனக்காக பணம் கொடுத்து என்னை **பிஷப்** ஆக்கும் நபர்கள் யாருடைய உதவியும் எனக்கு வேண்டாம் என்றும் கூறிவிட்டார். மேலும் அவர் கூறியது, நான் **பெங்களூர் டையோசிஸ்** மக்களை வழிநடத்த **தலைமை மேய்ப்பனாக,பிஷப்பாக** கர்த்தர் என்னை அனுமதிப்பாரானால் அது முறைப்படி எல்லார் முன்னிலையிலும் பகிரங்கமாக நடத்தபடவேண்டும் என்று திட்டமாக கூறிவிட்டார்.

அவர் **ஆயராக ஊழியம்** செய்த சபையினர் அனைவரும் ஜெபிக்க தொடங்கிவிட்டனர். இவர்களோடு டையோசிஸ்ஸில் **தெய்வபயம்**உள்ள சிலரும் ஜெபிக்க தொடங்கினார்கள். அந்த ஜெபம் கேட்கப்பட்டு ராஜதந்திரத்தோடு கோர்ட் தடை வருவதற்குமுன் பிஷப் அபிஷேக ஆராதனை ஏற்பாடுகள்

ஆலயத்துக்குள்ளேயேவைத்து மிக கம்பீரமாக நடந்தேறியது. அந்த அபிஷேக ஆராதனைக்கு எதிர்பார்த்த நபர்களின் எண்ணிக்கை ஆயிரம். ஆனால் அன்று அந்த ஆராதனையில் கலந்துக்கொண்டவர்கள் சுமார் 3000பேராக இருந்தனர். கன்னட MP,MLAக்களும் **கன்னட பாஷை** பேசும் பெங்களூரின் பெரிய பிரமுகர்களும், **பிஷப் அபிஷேக** ஆராதனையில் பங்கு பெற்றது. கர்த்தருடைய பிள்ளைகளின் ஜெபத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். பிஷப் அவர்களின் நேர்மையையும்,ஆவிக்குரிய வைராக்கியத்தையும் கர்த்தர் கனப்படுத்தினார்.

' புதிய பிஷப் **Rt.Rev.பிரசன்னகுமார்** அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துதல் கூறுகிறேன்.

' பல டையோசிஸ்களில் ஆவிக்குரியவர்களாகவும், ஜெபிக்கும் ஆயர்களாகவும் வாழ்ந்தவர்கள் **பிஷப்** பதவி பொருப்பேற்றதும் அவர்களின் **நல்ல சுபாவங்கள்** மாறி பல புதிய பிஷப்புகள் தங்களை **ராஜாக்களாக** நினைத்துக்கொண்டு தன்னைவிட வயது கூடிய ஆயர்களைகூட **டேய்** என்று மரியாதையில்லாத வார்த்தைகளை உபயோகிக்கும் அளவு அகம்பாவ சுபாவம் உடையவர்களாக மாறியிருக்கிறார்கள். புதிய பிஷப் அவர்களுக்கும் அந்த சுபாவமாற்றம் வந்துவிடாதபடியும், **பதவியானது** பிஷப்பின் சுபாவத்தை மாற்றிவிடாதபடியிருக்க பிஷப் அவர்களுக்காக டையோசிஸ் ஜனங்களின் ஜெபமும்,ஆயர்களின் ஜெபமும் இனிதான் மிக அவசியம் தேவை.

' புதிய பிஷப்.**பிரசன்னகுமார்** அவர்கள் பிஷப் பதவிஏற்ற பின்னும், தான் ஆயராக பணியாற்றிய சபையில் தன் பதவி காலம் முடியும்வரை ஆயராக அதே சபையில் பணியாற்றுவேன் என்று கூறி வழமையாக தான் உபயோகிக்கும் ஸ்கூட்டரில்(Two Wheeler) பயணித்து ஆராதனை நடத்தி விட்டுபோகிறார் என்ற செய்தி கேட்கும்போது நான் தேவனை துதித்தேன். தொடர்ந்து பிஷப் அவர்களுக்காக ஜெபிப்போம். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

**மனுஷகுமாரன்: ஊழியம் கொள்ள வரவில்லை.**
**ஊழியம் செய்யவே வந்தார். மத் 20:18,மாற் 10:45.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## பரலோகத்தில் ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்படவேண்டுமா?

### (இயேசு அழைக்கிறார்-2015 மே, பக்கம் 26)

**ஜெப கோபுரத்துக்கு** நீங்கள் பணம் அனுப்பினால் நீங்கள் குடிகாரராக இருந்தாலும், இரண்டு பெண்டாட்டிக்காரராக இருந்தாலும், கொலைக்காரராக இருந்தாலும் உங்கள் பெயர் பரலோக புத்தகமான **ஜீவ புத்தகத்தில்** எழுதப்படும்.

ஜெபகோபுரத்துக்கு நீங்கள் அனுப்பும் கள்ளப்பணம், லஞ்சப்பணங்களாக இருந்தாலும், உங்கள் பாவங்களானாலும் எல்லாவற்றையும் நீங்கள் **ஜெபகோபுரத்துக்கு அனுப்பும் பணம்** அவைகளை மறைத்துவிடும். பரலோகம்போக சுலபமான வழியை பார்த்தீர்களா?

பாவம் மன்னிக்கப்பட லஞ்சப்பணமாக ஜெபகோபுரத்துக்கு காணிக்கை அனுப்பிவிடுங்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களையும் நம்புகிறவர்கள் நம்புங்கள். இதே வழியைத்தான் நாலுமாவடிக்காரர்,ஏஞ்சல் டிவி சாது ஆகியவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள். அவர்கள் கட்டிடத்துக்கு பணம் அனுப்பினால் **பரலோக புத்தகத்தில்** உங்கள் பெயர் **எழுதப்படும்** என்று கூறியதாக செய்தி. மக்களை தவறான வழியில் வழிநடத்த இவர்களுக்குள் எத்தனை ஒற்றுமை.

**நம்பினால் - நம்புங்கள்.**

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## திரு.உமாசங்கர் ஐ.ஏ.எஸ்

**கேள்வி: திரு.உமாசங்கர்.IAS அவர்கள் இனி மத பிரச்சாரங்களில் ஈடுபடக்கூடாது என்று தமிழ்நாடு அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது. சட்டப்படி அது சரியானதுதானா? அந்த சட்டத்தை ஒரு IAS அதிகாரி மீறலாம் என்று நம் வேதம் போதிக்கிறதா?**

**பதில்:** *மத பிரச்சாரம் என்ற வார்த்தை அரசாங்க ஆணைக்கு பொருந்தாது. மத பிரச்சாரம் என்பது பொதுஇடங்களில்* ***இயேசுதான் தெய்வம்,இரட்சகர்,பாவபரிகாரி*** *என்று அறிப்பது பிரச்சாரம்(சுவிசேஷம் அறிவிப்பது) என்று கூறலாம். இப்படி பிரச்சாரம் செய்ய எல்லா மதத்துக்கும் உரிமை உண்டு. யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது. அவ்வளவே!.*



*ஆனால் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில்,ஜெபகூட்டங்களில், ஆலய வளாகத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பேசுவது மத பிரச்சாரம் ஆகாது. கிறிஸ்தவ மக்களுக்கு இடையில் ஒரு கிறிஸ்தவ* ***IAS*** *அதிகாரி பேசுவது என்பது அது கிறிஸ்தவரான அவருடைய தனிப்பட்ட உரிமையாகும். அதில் தமிழகஅரசு அல்லது* ***மத்திய அரசு*** *தலையிட்டு அவரை தடுத்து கட்டளையிட முடியாது.*

*ஆனால் ஒலிபெருக்கியை வீதிகளில் அமைத்து அதே பிரசங்கத்தை பொதுமக்கள் கேட்க செய்வது தவறு ஆகும். சபை வளாகத்தில் அல்லது பொதுமைதானத்தில் கூட்டம் நடத்தினாலும், வளாகத்துக்குள்ளேயே பாக்ஸ் போன்ற ஒலிபெருக்கி வைத்துகொள்ள* ***அரசாங்க அனுமதி*** *இப்போதும் உண்டு. அந்த பிரசங்கத்தை யாரும் தடைசெய்யகூடாது.*

*பொது மைதானத்திலும் மேடை அமைத்து இயேசுவைப்பற்றி அறிவிக்க கூட்டம் நடத்துபவர் போலீஸ் அனுமதி பெற்று கூட்டங்கள் நடத்தலாம். சட்டத்தில் அதற்கு இடம் உண்டு. அப்படி போலீஸ் அனுமதியுடன் பேசும் பொது கூட்டத்திலும்கூட நம் தெய்வமான* ***இயேசுகிறிஸ்துவைப்பற்றி மட்டும் கூற*** *அந்த பிரசங்கத்தை ஒலிபெருக்கி அமைத்து அறிவிக்க ஜனநாயக நாட்டில் அனுமதி உண்டு. ஆனால் அந்த பொதுகூட்டத்தில்கூட மற்ற* ***மத தெய்வங்களைப்பற்றி*** *இழிவாகபேசவோ* ***இந்துமத*** *தெய்வங்களைப்பற்றி கூறி அவைகள் யாவும்* ***பிசாசுகள்*** *என்று வர்ணிக்கவோ யாருக்கும் உரிமையில்லை. ஆனால் திரு.உமாசங்கர் அவர்கள் விஷயத்தில் இப்போது நான் மேலே குறிப்பிட்டபடி இந்து தெய்வங்களைப்பற்றி அவர் மிக இழிவாக பேசியதுதான் பிரச்சனையாக மாறியது. அவர் அப்படி பேசியதை* ***காவல்துறையினர்*** *பலமுறை பல்வேறு இடங்களில் அவர் பிரசங்கத்தைப் பதிவுசெய்து ஆதாரத்துடன் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கும், தமிழ்நாடு தலைமை செயலருக்கும் அனுப்பப்பட்டதால்தான் உமாசங்கர்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டி வந்தது.*

## திரு.உமாசங்கர் அவர்கள் அறிக்கை:

திரு.உமாசங்கர் அறிக்கையின்படியும், மற்ற சமூக ஆர்வலர்கள் டிவியில் நடந்த கலந்துறையாடலில் பகிர்ந்து கொண்டபடி **தமிழ்நாட்டிலானாலும்,** முழு **இந்தியாவிலானாலும்** இந்திய அமைப்பு சட்டப்படி **மத சார்பின்மை கொள்கையை** அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள் யாவரும் ஒரு இடத்திலும் பின்பற்றவில்லை என்பதாகும்.

உலகத்திலேயே **இந்துமத நாடு** என்றால் அது **நேபாளத்தை** மட்டுமே குறிக்கும் என்று ஏற்கனவே அறிவித்தேன். இது சரித்திரத்திலும் பதியப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாதேசம் இந்துமத நாடல்ல!. **மத சார்பின்மை** என்ற கொள்கையை பின்பற்றவேண்டும் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் எழுதப்பட்டதாகும். இந்த கொள்கையானது இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம் பெற்றிருப்பதால் இந்திய **ஜனாதிபதியானாலும், பிரதமரானாலும், மாநில முதல்வரானாலும்** மற்ற நீதிபதிகளானாலும், நம் நாட்டின் மற்ற முக்கிய தலைமை அதிகாரிகளானாலும் இவர்கள் **பதவி ஏற்கும்போது** இந்திய அரசியல் அமைப்பு சட்டத்துக்கு நான் கீழ்படிவேன் என்றும்,இந்திய அமைப்பு சட்டத்துக்கு எதிராக ஒருபோதும் செயல்படமாட்டேன் என்றும் **சத்தியபிரமாணம்** செய்துவிட்டுதான் பதவி பொருப்பெடுக்கிறார்கள்.

ஆனால் இப்போது முழு இந்தியாவிலும் மற்ற அனைத்து மாநிலங்களிலும் **மத சார்பின்மை** கொள்கையானது மிகபட்டவர்த்தனமாகவும் வெளியரங்கமாகவும் **மீறப்பட்டடுள்ளதை** காண்கிறோமே?.

## நீதிமன்ற ஆணை (கட்டளை):

நீதிமன்ற ஆணையில் **GO MS NO 426:** என்ற இந்திய சட்டபிரிவை மேற்கோள்காட்டி சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை 17.03.2010 தேதியிட்ட ஆணையில் அரசு(Govt) அலுவலக காம்பவுண்டிலோ, கட்டிடங்களிலோ, எந்த மதத்தின்கோவில்களோ,தெய்வ விக்கிரகங்களோ கட்டப்பட கூடாது. இனி புதிதாகவும் கட்டுதல்கூடாது என்று அந்த ஆணையில் கட்டளையிட்டுள்ளது.

ஆனால் இப்போது நாம் காண்பது என்ன? எல்லா அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் உள் நுழைவு வாயிலில் ஒரு **விக்கிரகமும்** அதை சுற்றி சிறிய அளவில் சுற்றுசுவர் எழுப்பி ஒரு **கோயிலாகவே** கட்டி வழிபடுகிறார்கள்.

**கலெக்டர்** அலுவலகம் முதல் **தாசில்தார்** அலுவலகம் வரை அனைத்து அரசாங்க அலுவலக அறைகளிலும் **இந்து தெய்வங்களின்** போட்டோக்கள் மாலையுடன் மாட்டப்பட்டு ஒவ்வொரு **வெள்ளிக்கிழமையும்,** அதற்கு பூஜையும் நடத்தி பொரி கடலை பழம் விநியோகிக்கிறார்களே? யார் அதை தடுத்தார்கள்!. அரசு அலுவலகம் இந்து மதத்தினருக்குமட்டும் சொந்தமா? எல்லா மதத்தினரும் வந்துபோகும் அலுவலகமாயிற்றே!. தமிழ்நாட்டில் ஒரு IAS அதிகாரி பொதுபணி துறைக்கு பொருப்பேற்றவுடன் **பூம்புகார்** போன்ற அரசுதுறை விற்பனை கூடத்தில் உள்ள அத்தனை இந்துமத விக்கிரக போட்டோக்களையும் அப்புறப்படுத்த கட்டளையிட்டார். உடனே அவைகள் நீக்கப்பட்டது. அவர் அந்த துறையின் பொறுப்பில் இருக்கும்வரை எந்த விக்கிரக **போட்டோக்களும்** எந்த அரசு விற்பனை கூடங்களிலும் இடம் பெறவில்லை. அந்த IAS அதிகாரி இப்படி ஒரு நடவடிக்கை எடுத்ததால் உடனே அவர் அந்த துறையிலிருந்து மாற்றப்பட்டார்.

## ஆயுத பூஜை:

வருடத்துக்கு ஒருமுறை ஆயுதபூஜை நாளில் பார்க்கவேண்டுமே? திருநீரையும்,சந்தனத்தையும் தண்ணீரில் கரைத்து வாசல்களிலும்,**கதவு,ஜன்னல்,டேபிள்,நாற்காலி** என்று ஒரு இடம்விடாமல்

அலங்கோலப்படுத்திவிடுகிறார்கள். அதைவிட கொடுமை எல்லா பைல்(File) களிலும்,கோப்புகளின் மீதும் தெளித்து எழுத்துக்கள் மறைக்கும்படியும் செய்துவிடுகின்றனர். பல கிறிஸ்தவ அதிகாரிகள் அதே அலுவலகத்தில் இருந்தும் தன் மேஜையிலும்,பீரோவிலும் சந்தனத்தை தெளிப்பதை தடுக்கும் தைரியம் இல்லாமல் பிடித்துவைத்த மண்பொம்மையைப்போல் அமர்ந்து அமைதி காக்கின்றனர். நான் கிறிஸ்தவன் என் பீரோவில் என் மேஜையில் திருநீறை பூசாதீர்கள் என்று கூற அவர்களுக்கு தைரியம் இல்லையே? அவர்களுக்கு ஆண்டவரைப்பற்றிய வைராக்கியம் இல்லையே? இது மிக அவமானமான செயலாகும்.

## தமிழ்நாட்டு அமைச்சர்களின் கேவலமான செயல்கள்:

**மத சார்பின்மை** சத்திய பிரமாணம் எடுத்த நம் தமிழ்நாட்டு அமைச்சர்கள் சிறையில் இருக்கும் ஜெயலலிதாவுக்காக **மண்தரையில்** சோறு சாப்பிட்டு அதை புகைப்படம் எடுக்க வைத்து அந்த படம் பத்திரிக்கையில் வெளிவர ஏற்பாடு செய்கிறார்கள். இது பக்திக்காக அல்ல, சிறையில் இருக்கும் தங்கள் தலைவி **ஜெயலலிதா** அதை பார்க்கவேண்டும் என்பதுதான் அதன் முக்கிய நோக்கமாகும். அப்படியே அமைச்சர்கள் கோவில்களில் தீ மிதித்து வழிபடுகிறார்கள். இதுவா மதசார்பின்மை?.

## பூமி பூஜை:

அரசாங்கம் சார்பாக ஒரு கழிவறை கட்டினாலும் அதன் அஸ்திபாரத்துக்கு மந்திரி MLA, MPமார்கள் சுற்றி நிற்க **பூமிபூஜை** நடத்தும் கேவலம் **தமிழ்நாட்டை தவிர** வேறு எங்காவது கண்டிருக்க முடியுமா?.

## உயர் அதிகாரிகள் தங்ககூண்டில் அடைப்பட்டவர்கள்:

நீதிபதிகள், கலெக்டர்கள்,தாசில்தார்கள்,முதல்வர்கள்,பிரதமர்கள்,ராணுவ உயர் அதிகாரிகள் யாவரும் அவரவர் மத ஆலயங்களுக்கு சென்று தங்கள் விரும்பும் தெய்வங்களை ஆராதிப்பதற்கு சில கட்டுப்பாடுகள் உண்டு.

டீ,காபி எஸ்டேட் தலைமை மேனேஜர்களை இப்போதும் எஸ்டேட்டில் வேலை செய்யும் வேலையாட்கள் **துரை** என்றுதான் அழைப்பார்கள். அவர்களில் பலர் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அடிக்கடி கிறிஸ்தவ சபை ஆராதனைகளில் பங்கெடுப்பதை தவிர்ப்பார்கள். சபை மக்கள் இப்படிப்பட்ட உயர் அதிகாரிகள் தங்கள் ஆலயத்துக்கு வரும்போது அவர்களிடம் பல சலுகைகளை எதிர்ப்பார்த்து அவைகளைக்குறித்து பேச அந்த வேலையாட்கள் அந்த அதிகாரிகளை நெருங்க ஏதுவுண்டு. அதனால் அவர்கள் மற்றவர்களைப்போல் சுதந்திரமாக தன் இஷ்ட தெய்வத்தை மற்றவர்களுடன் இணைந்து ஆராதிக்க தங்களால் இயலவில்லையே என்று மனவேதனைப்பட்டு பலர் என்னிடம் பகிர்ந்துக்கொண்டதுண்டு. அப்படிப்பட்ட உயர் அதிகாரிகளையும்,நீதிபதிகளையும் நான் அறிவேன். மேலும் இப்படிப்பட்ட உயர் பதவியில் உள்ளவர்களுக்கு மக்கள் நடமாடும் பொது இடங்களில் சென்றுவர **பாதுகாப்பு பிரச்சனைகளும்** உண்டு.

ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நம் முன்னாள் பாரத பிரதமர் திரு.நரசிம்மராவ் அவர்கள் **சாய்பாபா** காலடியில் அமர்ந்திருந்தாரே? சாய்பாபா ஆஸ்ரமத்தில் கொலை நடந்தபோது அது வெளி உலகம் அறியாதபடி இருக்க பிரதமரின் அலுவலகத்திலிருந்து எழுதப்படாத கட்டளை போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு வந்ததாக கேள்விப்பட்டோமே? இப்படிப்பட்ட பிரச்சனைகளை தவிர்க்கத்தான் உயர் அதிகாரத்தில் உள்ளவர்கள் இப்படிப்பட்ட பொது மக்கள் கூடும் மத கூட்டங்களுக்கு போவதை தவிர்த்துவிடுவார்கள்.

டெல்லி உச்ச நீதிமன்ற நீதிபதிகளும்,ஜனாதிபதியாக பதவி வகித்த **திரு.வெங்கட்ராமன்** அவர்களும் உடலில் மேல்துணி அணியாமல் **காஞ்சிபுரம் சங்கராச்சாரியார்** பாதத்தை தொட்டு

வணங்கியதை கண்டோமே!. சில காலத்திலேயே சங்கராச்சாரியார்களான இருவரும் கொலை குற்றத்தில் அகப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வெளிவந்தார்களே!. உயர் அதிகாரிகளும் நம்மைப் போல் மனிதர்கள்தான் அவரவர் தெய்வத்தை வணங்க ஆராதிக்க உரிமை உண்டு என்றாலும் இவர்கள் எல்லா மதத்தினர்களையும் பராமரிக்கும் பொதுவான அதிகாரத்தில் உள்ள **பொது நபராகும்.** ஒரு குறிப்பிட்ட மதத்தினரைத்தான் அவர் ஆதாரிப்பார். மற்ற மதத்தினரை அவர் வெறுப்பார் என்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் உண்டாகாமல் இருக்க இப்படிப்பட்டவர்கள் பொது இடங்களுக்கோ, பொதுமக்கள் கூடும் இடங்களுக்கோ, திருமண வைபங்களுக்கோ,ஆலயங்களுக்கோ போவதை தியாகம் செய்யவேண்டும்.

மேலே நான் குறிப்பிட்ட இவர்கள் **யாவரும் நாட்டில் உள்ள எல்லா மதத்தினர் மதிக்கும் பொது சொத்து** ஆகும்.

## தவறான நேர்சை:

முதல்வர் **ஜெயலலிதாவின்** கட்சியான AIADMK 2011ல் வெற்றி பெற்றவுடன் **சரிதா** என்ற AIADMK தொண்டர்களில் ஒருவள் தன் நாக்கை வெட்டி அறுத்து கோயிலில் காணிக்கையாக செலுத்திய முட்டாள் பக்தியை **தமிழ்நாடு அரசு செய்தி** குறிப்பில் வெளியிடலாமா? அதை செய்தி குறிப்பில் வெளியிட்டதால் மற்ற மாநில தினசரி செய்திதாள்களில் அந்த செய்தியை கிண்டலும் கேலியுமாக வெளியிட்டு, கேலி சித்திரங்களையும் வரைந்தது தமிழ்நாட்டுக்கு அவமானகரமான காரியங்களாகும். அவர்கள் சொந்த செய்திதாள்களில் செய்தியாக வெளியிடுவதில் நமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் **அரசாங்க செய்தி குறிப்பில்** நாக்கு அறுப்பு செய்தி வெளி வரலாமா? **மத சார்பின்மை** செத்துப்போனதே?. இப்படிப்பட்டவர்கள் அல்லது தமிழ்நாட்டு அதிகாரிகள் திரு.உமாசங்கரின் கிறிஸ்தவ பிரச்சாரங்களை குற்றப்படுத்த தகுதியில்லையே?

குற்றவாளி என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டபின் அவர் முன்னாள் முதல்வர் என்று குறிப்பிடாமல் குற்றவாளி(Acoust) என்று குறிப்பிடவேண்டும் அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால் அப்படிப்பட்ட குற்றவாளிக்கு ஜாமீன் கிடைக்க தமிழ்நாட்டு அமைச்சர்கள் ஹோமம் வளர்த்து,அங்கபிரதட்சனம் செய்தார்கள்? இப்படிப்பட்டவர்கள் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் **மதசார்பின்மையை** கைக்கொள்வேன் என்று **சத்திய பிரமாணம்** செய்தது செத்துப்போனதே? யார் இதை தவறு என்று சுட்டிக்காட்டுவார்கள்?.

‘ **டிராபிக் ராமசாமி** என்பவர் எது எதற்காகவோ பொது நல வழக்கு தொடுத்து தனக்கு விளம்பரம் தேடிக்கொண்டார். ஆனால் அரசாங்க அலுவலகங்களில் ஆயுதபூஜை செய்யக்கூடாது என்று பொதுநலன் வழக்கு போட அவருக்கு தைரியம் இல்லையே?. காரணம் அவரும் தன் நெற்றியில் பட்டை நாமம் தீட்டி நானும் தனிப்பட்ட மதத்தை சார்ந்தவன் என்பதை காட்டிக்கொள்ளத்தான் ஆசைப்பட்டாரே ஒழிய, அரசாங்கம் என்பது அனைத்து மதத்தினரின் பொது இடம் ஆகும். அங்கு எந்த மதத்தின் தெய்வங்களின் பூஜையையும் அனுமதிக்கக்கூடாது என்று பொதுநல வழக்கு தொடர அவருக்கு தைரியம் இல்லையே!. இப்படித்தான் நம் நாட்டில் மத சார்பின்மை என்ற சட்டத்துக்கு மதிப்பில்லாமல் போனது. இதற்கு யாரை குற்றம் சொல்லமுடியும்?.

## தமிழ்நாட்டு அரசாங்க சின்னம்:

**மத சார்பற்ற நாடு** என்பது பொய் என்பதற்கு நம் தமிழ்நாட்டு அரசாங்க சின்னமாக **அரசாங்க முத்திரையில்**(சீல்)நாம்காண்பது இந்து மத மக்கள் தொழும் **இந்துகோவில் கோபுரம்** ஆகும். அதுவும் சுற்றுலா பயணிகள் காண ஆசைப்படும் சரித்திர பிரசித்திப்பெற்ற **தஞ்சை** கோவிலோ, **மதுரை** மீனாட்சி கோயிலோ தமிழ்நாட்டு அரசாங்க சின்னமாக இடம் பெறவில்லை. அந்த முத்திரையில் வரையப்பட்டது பிரபலம் அல்லாத கோயிலான ராஜபாளையம் அருகே உள்ள **ஸ்ரீவில்லிபுத்தூர்** இந்து ஆலய கோபுரமாகும்.

இந்தியாவின் **தேசிய பறவையான மயில்** நம் இந்திய தேச பறவையின் அடையாமாகும். **மூன்று** தலையுள்ள **சிங்கம் பொரித்த சின்னமும்,** சுதந்திரம் வாங்கி தந்த **மகாத்மா காந்தியின்** உருவமும் நம் தேச சின்னமாக நாம் உபயோகிக்கும் ரூபாய் நோட்டுகளில் பொரிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் ஒரு காலத்தில் **பிளேக் என்ற** தொற்றுநோய் கொள்ளை நோயாக மாறி எத்தனையோ ஆயிரம் மக்கள் அந்த காலத்தில் மரித்தார்கள். பிளேக் நோய் காரணமாக லட்சக்கணகக்கனவர்கள் புலம் பெயர்ந்து போனார்கள். அதன்பின் அவர்கள் பல ஆண்டுகள் கழித்து ஆந்திராவுக்கு திரும்பி வந்து மறக்கமுடியாத அந்த பெரும் இழப்பை ஞாபகப்படுத்தும் வண்ணமாக **இரண்டு கோபுரம்** உள்ள குதுப்பினர் ஸ்துாபியும், வாசலும் அமைந்த ஒரு கட்டிடத்தை எழுப்பி இப்போது அது **ஆந்திராவின் சின்னமாக** மாறியது. அந்த **வாசல் அங்கு மிக** அதிகம் **இஸ்லாமியர்** வாழும் இடத்தில் அமைத்தார்கள். அதுதான் ஆந்திர மாநில சின்னமாகும். அதே ஆந்திராவில் உள்ள கோடீஸ்வர தெய்வ கோயிலாக கூறப்படும் **திருப்பதியை** ஆந்திரா மாநிலத்தின் அடையாள சின்னமாக அவர்கள் வைக்கவில்லையே?.

அதேபோல் கல்கத்தாவுக்கு ஒரு **ஹவுரா பாலம்,** ராஜஸ்தானுக்கு **அரண்மனை** இப்படி பலவாறு ஞாபக சின்னங்கள் நம் நாட்டிலும் சில மாநிலங்களிலும் உண்டு. ஆனால் இந்தியாவில் எங்கும் ஒரு குறிப்பிட்ட **மதத்தின்** அடையாளமாக நாட்டின் அல்லது மாநிலத்தின் சின்னமாக வைக்கப்படவில்லை. ஆனால் **தமிழ்நாட்டில்** மட்டும் **இந்துமத கோயிலின்** கோபுரத்தை அரசு அங்கீகாரம் பெற்ற சின்னமாக்கிவிட்டனர். எப்படி நம் தமிழ்நாட்டை **மத சார்பற்ற மாநிலம்** என்று கூறமுடியும்?.

இப்படியிருக்க திரு.உமாசங்கர் அவர்கள் செயலை மத பிரச்சாரம் என்று எப்படி கூறமுடியும்? என்றாலும் திரு.உமாசங்கரின் நிர்வாகத்தில் காட்டிய நேர்மையை கிறிஸ்தவ ஊழியத்தில் அவர் செய்த பிரசங்கத்தில் **பிரசங்க நாகரீகம்** என்பது காணப்படவில்லை. ஆரம்பத்தில் அவரின் மனமாற்றம் அவரின் சாட்சி, அவரின் பிரசங்கம் ஆகியவைகளைகேட்டு **ஜாமக்காரனில்** நான் புகழ்ந்து எழுதினேன். ஆனால் எப்போது உமாசங்கர் அவர்கள் **தரிசனம்,சொப்பனம், பரலோக காட்சிப்பற்றி** பேசி **கர்த்தர் என்னிடம்** கூறினார் என்றெல்லாம் தவறான உபதேசத்துக்குள் பிரவேசித்தாரோ அப்போதே பரிசுத்த ஆவியானவர் அவரைவிட்டு விலகினர் என்று நான் தீர்ப்பு கூறவில்லை. ஆனால் யூகிக்க முடிகிறது. ஆவியானவர் எப்போதும் தான் எழுதிய வேத வசனத்தின்படி தான் **ஒரு ஊழியனை வழி நடத்துவார்**, அப்படியேதான் எழுதிய **வேத வசனத்தின்படிதான்** சபையையும் நடத்துவார். வசன அடிப்படையில்லாத இப்படிப்பட்ட **பெந்தேகோஸ்தே சபைகளின்** வித்தியாசமான உபதேசங்களுக்குள் திரு.உமாசங்கர் அவர்கள் எப்போது நுழைந்தாரோ அப்போதே அவருடைய **ஆவிக்குரிய ஜீவியம்** கேள்விக்குறியானது. அவருக்காக ஜெபிப்போம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# 2016 சட்டசபை தேர்தல்:

**கேள்வி: வரும் 2016 சட்டசபை தேர்தல் எப்படியிருக்கும்? எப்படிப்பட்ட ஆட்சியை எதிர்ப்பார்க்கிறீர்கள்?.**

***பதில்:*** இந்த **2015** மே **மாதம்** வரை உள்ள தமிழ்நாட்டு நிலைமையை வைத்து கூறுகிறேன். இப்போது குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட **செல்வி.ஜெயலலிதா** அவர்கள் தலைமையில் உள்ள AIADMK மீண்டும் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க நிறைய வாய்ப்புகள் உண்டு என்று நினைக்கிறேன்.

நான் சிறுவனாக இருந்த நாட்களில் அறிஞர்.**அண்ணாதுரை** அவர்களின் பேச்சால் நான் கவரப்பட்டு அவர் கட்சியின் விசிறியாக இருந்தவன். கலைஞர், இரா.நெடுஞ்செழியன், ஈ.வி.கே.சம்பத்

இவர்களின் கட்சி பிரச்சார பேச்சுக்களை விடியவிடிய கேட்கும் வகையில் கவரப்பட்டவன். DMK கட்சியின் அனுதாபி என்றும் கூறலாம். என் தகப்பனார் காங்கிரஸ் அனுதாபியாக இருந்தார். ஆனால் அவர் எந்த கட்சிக்கும் ஓட்டுபோடமாட்டார். எல்லா அரசியல்வாதிகளும் உண்மையில்லாதவர்கள் என்பது அவரின் கணிப்பு. அது உண்மை என்பதை நானும் அரசியல் தலைவர்களிடம் நெருக்கம் அதிகமானபோது நாளடைவில் மிக நன்றாகவே உணர்ந்தேன்.

‘ **AIADMK** : புரட்சி தலைவர்.**எம்.ஜி.ஆர்** அவர்கள் AIADMK கட்சியை தொடங்கினார். திரு.M.G.R அவர்களை பொருத்தவரை ஏழைகளுக்காக தன் உழைப்பை, தன் சொத்தை,தன் பணத்தை மிகுதியாக செலவழித்து ஏழைகளின் மனதில் மாறாத இடம் பிடித்தவர். அவர் தமிழ்நாட்டு முதல்வர் பதவி ஏற்றபின்னும் அவரின் **கொடுக்கும் குணம்** மாறவில்லை. அதனால் எல்லா மக்களாலும் புகழப்பட்டார். ஆனால் அவரின் அரசியல் நிலைப்பாடு முதல்வர் பதவி ஏற்றபின் மாறியது. ஆகவே மறைந்த தியாகியும், பெருந்தலைவர் என்ற பெயருக்கு உரியவருமான **காமராஜர்** அவர்கள் அன்று கூறியதுபோல அவரின் கணிப்பின்படி DMK & AIADMK ஆகிய இரண்டு கட்சிகளும் **ஒரே குட்டையில் ஊறின இரண்டு மட்டைகள்** என்று அவர் கூறியது உண்மை என்று இப்போது மக்கள் உணர தொடங்கிவிட்டார்கள்.



‘ **காங்கிரஸ்:** அன்றைய தலைவர்களான **காமராஜர், கக்கன்** போன்ற உண்மை தியாகிகள் யாவரும் அன்று காங்கிரஸ் கட்சியை நடத்திக்கொண்டுபோகும்வரை காங்கிரஸ் கட்சி நல்ல அரசியல் கட்சியாக இருந்தது. இவர்களின் மறைவுக்கு பின் தமிழ்நாட்டை பொருத்தவரை காங்கிரஸ் சிதறு தேங்காய்களாக ஒன்றுக்கும் உதவாத, ஒற்றுமையில்லாத உடைந்த கண்ணாடி துண்டுகளாக மாறிவிட்டது. இனி காங்கிரஸ் கட்சி என்று ஒன்று தமிழ்நாட்டில் இருக்குமா? என்ற கேள்விக்குறி எழும்பி அது உண்மையாகவும் ஒன்றுமில்லாத கட்சியாகவும் மாறிவிட்டது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, முழுஇந்தியாவிலும் இனி காங்கிரஸ் தழைக்குமா? என்பது சந்தேகம் என்ற நிலையில் காங்கிரஸ் கட்சி காணப்படுகிறது.

‘ **DMK:** அறிஞர்.**அண்ணாதுரை** அவர்கள் ஆரம்பித்த கட்சியான திராவிட முன்னேற்ற கழகம். இப்போது ஒரு உறையில் **இரண்டு கத்தி(ஸ்டாலின்-அழகிரி)** என்ற நிலைப்பாடு மாறி ஒரே தலைவன் என்ற உறுதியான மாற்றம் வரும்வரை DMK மறுபடியும் தமிழ்நாட்டை ஆள வழியேஇல்லை. வெறும் **தமிழை** மட்டும் வைத்து நாட்டை ஆளமுடியாது. DMKயிலிருந்து **கலைஞர்.கருணாநிதியின்** குடும்ப உறவுகள் அத்தனையும் கலைஞரைவிட்டும் கட்சி பதவியிலிருந்தும் நிலையாக **அகறப்படுமானால்** மேலும் கலைஞரின் உறவினர் யாருக்கும் எந்த பதவியும், பொறுப்பும் இனி கொடுப்பதில்லை என்று தீர்மானித்து செயல்பட்டால் ஒருவேளை கலைஞரின் இந்த **முதிர்ந்த வயதிலும்**,நடக்கமுடியாத நிலையிலும் **கலைஞர் மட்டுமே** தன் பழுத்த அனுபவம்மூலம் கட்சியையும், நாட்டையும் மீண்டும் வழி நடத்த வாய்ப்புண்டு. ஆனால் அது நடக்காத காரியம் ஆகும். இனி DMK எதிர்கட்சியாககூட வர வாய்ப்பில்லை. இதுதான் இன்றைய நிலை.

‘ **AIADMK:** முன்னாள் முதல்வர்.**ஜெயலலிதா** அவர்கள் ஒருவேளை குற்றவாளி கூண்டிலிருந்து ஜெயிலுக்கு போகாமல் வெளியே வந்தாலும், வராமல் **ஜெயிலுக்குபோனாலும்** 2016ம் வருடம் தேர்தலில் நிச்சயம் ஜெயிலில் இருந்தவாரே தன் கட்சியை வெற்றி பெற செய்வார். இப்போதைய நிலையில் காணப்படுவதுபோல் தேர்தலில் ஜெயித்தபின் **டம்மி முதல்வர்** யாரையாவது நியமித்து தமிழ்நாட்டு அரசை அவரால் நடத்தமுடியும். அந்த தனித்திறன் அவருக்குண்டு.

*அவர் ஒரு நல்ல நிர்வாகி என்று பலர் கூற கேட்டுள்ளேன். ஆனால் தமிழ்நாட்டின் முழு **பிரச்சனைகளுக்கும்** - காரணமான **சசிகலா** தொடர்பை **ஜெயலலிதா** அவர்கள் முற்றிலுமாக நீக்கினால் ஒழிய தமிழ்நாட்டு ஆட்சியை அவரால் சீராக நடத்த முடியாது. இப்போதுள்ள நிலையில் எதிரிகள் யாருக்கும் ஒற்றுமை இல்லை, ஒருமித்த கருத்தும் இல்லை. இது AIADMK தேர்தலில் ஜெயிக்க மிகவும் உதவும்.*

*ஆக, அடியேன் ஒரு பத்திரிக்கை விமர்சகனாக கூறுவதென்னவென்றால் தமிழ்நாட்டில் உள்ள எதிர்கட்சிகள் யாவருக்குள்ளும் ஒற்றுமையில்லாதபடியால் **கடைசி நேரத்தில் ஏதாவது ஒரு கூட்டணி அமைந்தாலும் கூட்டணியின் முதல்வர் யார்?** என்பதை தங்களுக்குள் ஒத்த கருத்தோடு எதிர்ப்பு எதுவும் இல்லாமல் **முதல்வர் யார்** என்பதை தேர்தல் நேரத்தில் அறிவிக்காதவரை எத்தனை கூட்டணிகள் தேர்தலில் நின்றாலும் ஜெயிக்கமுடியாது. வரும் தேர்தலில் தேவன் அனுமதித்தால் AIADMK ஜெயிக்க அதிக வாய்ப்பு உண்டு என்று எண்ணுகிறேன்.*

***இது என் தனிப்பட்ட அபிப்ராயம் ஆகும்.***

***இது தீர்க்கதரிசனம் அல்ல!.***

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# அரிமத்தியா யோசேப்பு

**Prof.Edison** (சத்திய வசனம்)

Selected

அரிமத்தியா ஊரானாகிய **யோசேப்பைப்பற்றி** இச்செய்தியில் தியானிக்கப்போகிறோம். இவனைப்பற்றி வெகு சில குறிப்புகளே வேதத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும், இவன் செய்தவைகளை வைத்துப் பார்க்கும்போது இவன் எப்படிப்பட்டவன் என்றும் எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்தான் என்பதையும் நாம் கண்டுக்கொள்ளமுடியும். மத்தோயு 27:58ம் வசனத்தையும், தொடர்ச்சியாக சொல்லப்படுகிற சில வசனங்களையும் வாசித்துப்பாருங்கள்.

**"சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானகரிய ஒரு மனுஷன் வந்து பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்".** மத் 27:57. இதில் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைப்பற்றி சொல்லியிருப்பது என்னவென்றால், இவன் இயேசுவுக்கு ஒரு சீஷன், இவன் ஐசுவரியவான் என்றும் சொல்லியிருக்கிறது. மாற்கு 15:43ல் "கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும், அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்" என்று வாசிக்கிறோம்.



சகோதரனே, இந்த வசனம் சொல்லுவதிலே சில வார்த்தைகளை நாம் கவனிக்கவேண்டும். ஆலோசனைக் காரன் - யூதர்களுடைய சனகரிப் சங்கத்திலே தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் ஆலோசனை சங்கத்திலே Counselors என்ற பொறுப்பிலே இருப்பார்கள். இந்த அரிமத்தியா ஊரானும் அதிலே ஒருவனாக இருந்தபடியினால், சமுதாயத்திலெ நல்ல அந்தஸ்துடையவனாக இருந்தான். அதுமட்டுமல்ல, அவனைக்குறித்து **"தேவனுடைய ராஜ்யம் வரக்காத்திருந்தவன்"** என்றும் சொல்லியிருக்கிறது.

லூாக் 23:50-53 வரை உள்ள வேதபகுதியிலும் இதே அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைபற்றி பார்க்கலாம். **யோசேப்பு** என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான். அவன் உத்தமனும்,நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியா விலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய தவறான ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான். அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, அதை இறக்கி,மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப் பட்டதுமாய் **ஒருக்காலும் ஒருவனும்** வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்"என்று எழுதியுள்ளது. பாருங்கள். மத்தேயு இவ்வாறு சொல்லுகிறார்: அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பை **சீஷனாகவும்,ஐசுவரியவானாகவும்** இருந்தான் என்று குறிப்பிட்டுள்ளது. சீஷன் என்பவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் இயேசுவைப் பின்பற்றுகிறவனாக இருக்கவேண்டும். அப்படியானால் இந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் இயேசுவைப் பின்பற்று கிறவனாக இருந்தான் என்று அறியமுடிகிறது.ஆனால் **ஐசுவரியவான்** என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசு ஐசுவரியவானைப்பற்றி என்ன சொல்லியிருக்கார்?என்பதை கவனியுங்கள். ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும் என்று. அப்படியென்றால் அரிமத்தியா யோசேப்பு எப்படி சீஷனாகவும், ஐசுவரியவனாகவும் இருந்தான்? மிகவும் முரண்பாடான இரண்டு காரியங்களை இவன் எப்படி செய்ய முடிந்தது? வேதம் சொல்லுகிறது. **"ஐசுவரியம் விருத்தியானால் உன் இருதயத்தை அதின்மேல் வைக்காதே".** இந்த அரிமத்தியா யோசேப்பு அவன் தன் ஐசுவரியத்தையோ,பணத்தையோ தன் நம்பிக்கையாக வைக்காமல் இயேசுவையே நம்பியிருந்தபடியினால்,அவன் உத்தமனும், நீதிமானுமாயிருந்து அவன் பணக்காரனாக இருந்தாலும் இயேசுவுக்கு அவன் ஒரு உத்தம சீஷனாக இருந்தான். அதைத்தான் நாம் இங்கு ஆச்சரியமாகப் பார்க்கிறோம்.

சகோதரனே,சகோதரியே, இன்றைக்கு நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள்? அரசாங்கத்துக்கு பயப்படாமல் பணத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல் தேவனுக்காக துணிந்து நிற்பீர்களா? நீங்கள் துணிந்து நிற்கவேண்டிய காலம் வெகுவிரைவில் வந்துக்கொண்டிருக்கிறது. இப்போது இந்தியாவில் எங்கும் ஆலயங்கள் இடிக்கப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நேரத்திலே நீங்கள் தைரியமாய் இயேசுவுக்கென்று சிலுவை சுமக்கிறவர்களாய் இருப்பீர்களா? இந்த அரிமத்தியா ஊரான் அப்படிப்பட்டவனாக இருந்தான்.பாருங்கள்,அவன் யூதருடையபட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும்,செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான் என்று வேதம் குறிப்பிடுகிறது. இயேசுவை அவர்கள் பிடிப்பதற்கும்,அவரை விசாரித்து அவர் மரண ஆக்கினைக்குள்ளாக அவரைத் தீர்த்ததையும் இந்த யோசேப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. தன்னை சங்கத்தைவிட்டு நீக்கினாலும் பரவாயில்லை என்று பதவிக்காக இயேசுவை மறுதலியாமல் அவன் தைரியமாக, அவர்களுடைய ஆலோசனைக்கும், செய்கைக்கும் சம்மதிக்கவேயில்லை என்று சரித்திரம் கூறுகிறது.

மாற்கு 15:43ல் "**.....**யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய் இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்" என்று வாசிக்கிறோம். சீஷர்கள் கைவிட்டு ஓடிவிட்டார்கள். ஆசாரியர்கள் இயேசுவைப்பற்றி பேசினவர்களையெல்லாம் ஆலயத்துக்குப் புறம்பாக்கினார்கள். இனி இவனுடைய பதவியும் பறிபோகலாம். அந்தஸ்து மாறலாம், ஆனாலும், அவன் இயேசுவினிடத்தில் கொண்டிருந்த அன்பினால் இவ்வாறு துணிந்து ஏற்பாடுகளைச் செய்தான். வேதம் என்ன சொல்லுகிறது: கர்த்தர்மேல் வைக்கும் **"பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்"**(1யோவான் 4:18). இவனும் ஒரு காலத்தில் அந்தரங்க சீடனாய்த்தான் இருந்தான். ஆனால், இயேசுவின் மரணம் இவனை அசைத்துவிட்டது. துணிந்துபோய், என்ன நடந்தாலும் பரவாயில்லை. இந்த இயேசுவை நான் அடக்கம்பண்ணுவேன் என்று இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்.

சகோதரனே, கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்துவை பூமிக்கு தருவதற்கு ஒரு மரியாள் தேவைப்பட்டாள். மரியாளைப்போல அந்த பாக்கியம் பெற்றவர்கள் உலகத்திலே முன்போ, இப்பொழுதோ,பின்போ இருக்கவே முடியாது. அதேவிதமாக, இயேசுகிறிஸ்துவின் பூலோக வாழ்க்கையை முடிக்கவும் ஒரு யோசேப்பு தேவைப்பட்டான். இந்த **யோசேப்பு** தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தான். **தன்னுடையதையும்** அதாவது தனக்காக வெட்டி ஆயத்தமாக்கி வைக்கப்பட்ட தன் சொந்த கல்லறையையும் ஆண்டவருக்கென்று விட்டுக்கொடுத்தான். அவன் துணிந்துவந்து இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கினான். இவனும் நிக்கோதேமுவும் சேர்ந்து வெள்ளைப் போளமிட்டு மெல்லிய துப்பட்டியால் சுற்றி யோசேப்பின் சொந்தக் கல்லறையில் அதுவும் ஒருவனும் ஒருக்காலும் வைக்கப்படாததுமாயிருந்த கல்லறையில் வைத்து ஒரு பெரிய கல்லைக்கொண்டு மூட வைத்தான். உலக்கத்திலே யாருக்குமே கிடைக்காத ஒரு அரிய வாய்ப்பு இது ஆகும்.

சகோதரனே, சகோதரியே இந்த அரிமத்தியா யோசேப்பு அவன் இயேசுவின்மேல்உள்ள அன்பை வெளிக்காட்டினான். இன்றைக்கு நீங்களும் இயேசுகிறிஸ்துவை, நேசிக்கிறேன் என்று சொல்லுவீர்களென்றால், அந்த அன்பை உங்கள் வாழ்க்கையில் வெளிக்காட்டுவீர்களா?

மேலும், அரிமத்தியா யோசேப்பைக்குறித்து, "தேவனுடைய ராஜ்யத்துக்கு காத்திருந்தவன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்நாட்களில் ஒவ்வொரு யூதனும் தேவனுடைய ராஜ்யம் வரவும்,மேசியா வரவும் எதிர்பார்த்திருந்தனர். மேசியா வருவார், ரோம சாம்ராஜ்யத்திலிருந்து விடுவித்து தன்னுடைய **ராஜ்யத்தை ஆரம்பிப்பார்** என்று **யூதர்கள் மேசியாவுக்காக** காத்திருந்தார்கள். காரணம், ரோம ஆட்சியை கவிழ்த்துவிட்டு **இயேசு இராஜாவாக அமருவார்** என்று எதிர்ப்பார்த்தார்கள். சீஷர்களும் அப்படித்தான் எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் இயேசுவே என்னுடைய இராஜ்யம்,அரசாட்சி இவ்வுலகத்துக்குரியதல்ல என்றார். தான் பாவத்திலிருந்து மக்களை மீட்டுஎடுக்கும் மேசியாவாக வந்தபொழுது அவரை ஏற்றுக்கொள்ளாமல் எல்லாரும் இயேசுவை புறக்கணித்தார்கள். ஆனால், இந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன் இயேசுவை மேசியாவாக இரட்சிக்க வந்தவராக ஏற்றுக்கொண்டதினால், அவரை இவன் நேசித்து அவருக்கு சீடனானான். அவரை ஏற்றுக்கொண்டதினால் தன் **உள்ளத்திலே தேவனுடைய ராஜ்யத்தை** அனுபவித்தான். அதை வெளிப்படையாக அவன் தன்னுடைய அன்பைக்காட்ட அவனுக்கு ஒரு வாய்ப்புக்கிடைத்தது. இயேசுவின் சரீரத்திற்கு மூன்றாம் நாள் காலையிலேயே சுகந்தவர்க்கமிட சிலப்பெண்கள் வந்தார்கள். ஆனால்,அவர்களுக்கோ இயேசுவுக்கு ஒரு நன்மையும் செய்யும் பாக்கியம் கிடைக்கவேயில்லை. ஏன்? இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார்!.

ஆம்!. இவர்களுக்கு இயேசுவின் சரீரத்திற்கு சுகந்த வர்க்கமிடும் பாக்கியம் கிடைக்க வேயில்லை. எனவே, இந்த அரிமத்தியா ஊரான்தான் அந்த பாக்கியவான். ஆனாலும், இவன் அந்தரங்க சீடனாய் இருந்தபடியினால்,அநேகர் இவனை ஒரு கோழை என்றுதான் அன்று சொன்னார்கள். ஒரு வேலைக்காரியின் முன்னாக மறுதலித்த பேதுரு அதன்பின் ஆலோசனை சங்கத்திலே ஜீவாதிபதியைக் நீங்கள்தான் கொலை செய்தீர்கள் என்று தைரியமாகப் பேசவில்லையா? இயேசுவின் மரணமும்,பரிசுத்தஆவியின் நிறைவும் பேதுருவைப் பெலப்படுத்தியது?.

அதேபோல அதேபோல அரிமத்தியாவும் இயேசுவின் மரணத்தினால் தைரியமடைந்து எல்லா சீஷர்களும் இயேசுவை கைவிட்டு ஒடிவிட்டார்கள். உறவினர்களும்,மற்றவர்களும் தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருக்கும்போது இவன்மட்டும் துணிந்துபோய் பிலாத்துவினிடத்திலே அவருடைய சரீரத்தைக்கேட்டு வாங்கி, அவன் மெல்லிய துப்பட்டியால் சுற்றி, ஒருவரும் வைக்கப்படாத தனக்கென்று செதுக்கிவைத்திருந்த ஒரு கல்லறையில் இவரை வைத்தானே!. தனக்கென்று வைத்திருந்ததை யெல்லாம் தேவனுக்கென்று கொடுத்தானே!. இவன் கோழையா?இல்லவே இல்லை. அவன் ஒரு தைரியசாலி. இயேசுவை நீங்கள் உள்ளத்திலே சந்தித்திருப்பீர்களென்றால், இயேசுவின் அன்பு உங்களுடைய உள்ளத்தில் இருக்குமென்றால் அது **பயத்தைப் புறம்பே தள்ளி** உங்களையும் **தைரியசாலியாக்கும்.** நீங்கள் **எங்கும் இயேசுவை அறிவிப்பீர்கள்**. தைரியமாய் சுவிசேஷம் சொல்லப்புறப்படுவீர்கள்.

பிரியமானவர்களே, இயேசுவின் மரணத்தையும் இந்த அரிமத்தியாவையும் இணைத்துப் பாருங்கள். எவ்வளவு ஆச்சரியமான ஒரு மாற்றம். உங்களுக்குள் இந்த மாற்றம் வந்திருக்கிறதா? இல்லையென்றால் ஆண்டவரிடத்திலே அழுது கேளுங்கள். ஆண்டவரே, உம்மை ஏற்றுக்கொள்ளவும் வெளிப்படையாய் தைரியமாய் உம்மை அறிவிக்கவும் என்னைப் பெலப்படுத்தும் என்று கேளுங்கள். ஆண்டவர் உங்களை பெலப்படுத்துவார். உங்களை சீடனாக ஏற்றுக்கொள்வார். தேவனுடைய ராஜ்யத்தில் உங்களுக்கும் ஒரு பங்கு நிச்சயம் கிடைக்கும். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பாதுகாப்பு



## ஊழியக்காரர்களின் குடும்பத்துக்கு-பிள்ளைகளுக்கு பாதுகாப்பு

## கிறிஸ்தவ விசுவாசிகளின்-பிள்ளைகளுக்கு பாதுகாப்பு

உண்மையான ஊழியர்கள்,மிஷனரிகள், பாரத்தோடு ஊழியம் செய்யும் போது **பிசாசு** மிகவும் கோபங்கொள்கிறான். அவனால் ஊழியர்களை-உண்மையான விசுவாசிகளை தாக்க முடிவதில்லை. முக்கிய காரணம், உண்மையான ஊழியர்கள்,யோ 14:23,24ன்படி உண்மையான கிறிஸ்தவ விசுவாசிகள் யாவரும் கிறிஸ்துவை தங்களுக்குள் சுமந்துசெல்வதால் பிசாசு அவர்களை தொட அல்லது தாக்க முயலுவதில்லை. ஆனால் பிசாசின் கோபம் ஊழியர்களின்-விசுவாசிகளின் குடும்பத்தின்மீது திரும்புகிறது. அவர்களின் பிள்ளைகளை தாக்கவும், குடும்பத்தில் வீட்டில் மற்றவர்களால், உறவினர்களால், உடன் பிறப்புகளால் பிரச்சனை உண்டுபண்ணி சமாதானம் இழந்து ஊழியத்தை சந்தோஷமாக செய்யவிடாமல் ஊழியர்களை-விசுவாசிகளை சோர்வடைய செய்கிறது.

இவைகள் ஒரு ஊழியருக்கு-மிஷனரிகளுக்கு,விசுவாசிகளின் குடும்பங்களுக்கு உண்டாகும் என்று எதிர்ப்பார்ப்பவர்களுக்கு, அந்த பிசாசின் தொல்லைகளை எதிர்பார்த்து அவைகளை தைரியத்தோடு சந்திக்க தயாராக இருப்பவர்கள் தன் வீட்டுக்குள் பிசாசால் உண்டாகும் பிரச்சனைகளை நினைத்து சோர்ந்துபோகாமல் அவன் தந்திரங்களை நாம் நன்கு அறிவோமே, என்பதில் உறுதிக்கொண்டு எதைக்குறித்தும் கவலைக்கொள்ளாமல் வறுமை,அவமானங்களை,தோல்வி, பயமுறுத்தல்களை சகித்து ஊழியம் செய்வதில் கண்ணாக இருப்பார்கள்.

என்றாலும் ஒவ்வொரு ஊழியனும்,விசுவாசியும் நம் குடும்பங்களை நம் பிள்ளைகளை பிசாசு தொடாதபடி ஒவ்வொரு நாளும் காலையிலும்,நினைவுகூறும்போதெல்லாம் குடும்பத்துக்கும், **பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு** அளிக்கும்படி ஆண்டவரிடம் ஜெபித்துக்கொண்டேயிருக்க வேண்டும். அந்த ஜெபம் குடும்பத்துக்கும்,பிள்ளைகளுக்கும் அரணாகவும்,பாதுகாப்பாகவும் இருக்கும்.

## என் ஊழியத்தில் நடந்த அற்புதமும் - பிசாசின் தாக்குதலும்:

1976ம் வருடம் **கேரளா** மாநிலத்தில் **திருவனந்தபுரம்** மாவட்டத்தில் **நெய்யாற்றின்கரை** என்ற ஊரின் அருகே **திருபுரம்** என்ற ஊர் உண்டு. அங்குள்ள CSI ஆலயத்தின் கன்வென்ஷனில் பேச அழைக்கப்பட்டிருந்தேன். முதல்நாள் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. மேடையில் சபை தலைமை ஆயரும் மற்ற சபைகளின் ஆயர்களும்,ஊழியர்களும் அமர்ந்திருந்தனர். நான் மைக்கில் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போது ஒரு நபர் ஆயரின் காதில் ஏதோ கூறினார். கூட்டம் முடிந்தவுடன் ஆயர் என்னிடத்தில் கூறினார். டாக்டர் நம் சபை அங்கத்தினர் ஆலயத்தின் அருகே அவர் வீடு உண்டு. அவர் பெயர் **திரு.ஜான்** என்பதாகும். அவருடைய மனைவி கடந்த ஒரு மாதமாக வியாதியின் காரணமாக அரசாங்க மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனற்று **கடந்த 23** நாட்களாக **சுயநினைவு திரும்பாத நிலையில்** டாக்டர்கள் **இனி பிழைக்க**

வாய்ப்பில்லை என்று அறிவித்து வீட்டுக்கு கொண்டுபோக சொன்னதால் இப்போது அந்த பெண் வீட்டுக்கு திரும்பி 9 நாட்களாகிறது. சுயநினைவு அற்றநிலையில் ஆகாரமும் வாயில் செலுத்தமுடியாத நிலையில் இன்று மாலைக்குள் மரணம் அடைந்துவிடுவார் என்று டாக்டர்கள் கணித்ததால் பிள்ளைகள் குடும்பத்தினர் எல்லாரும் அடக்கம் செய்ய வந்துவிட்டனர். ஆனால் எதிர்ப்பார்த்தபடி பகலில் அவள் மரணம் சம்பவிக்கவில்லை.

ஆனால் நம் கூட்டம் தொடங்கும்முன் நாடிதுடிப்பு அடங்கிவிட்டதாக நர்ஸ் கூறியதால் அடக்கம் செய்ய குழிவெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அடக்கம் இன்று இராத்திரியிலேயே நடத்தவிடவேண்டும் அப்போதுதான் வெளிஊரிலிருந்து வந்தவர்கள் ஊர் திரும்ப வசதியாக இருக்கும் என்று அவள் கணவன் கூட்டம் நடக்கும்போது என் காதில்வந்து கூறினார்கள். ஆனால் நான் நாளை காலையில் அடக்கம் வைத்துக்கொள்ளலாம் என்று கூறி அனுப்பிவிட்டேன். நாம் இருவரும் அவர்கள் வீட்டுக்கு இப்போதே சென்று ஜெபித்துவிட்டு சாப்பிடபோகலாம் என்றார்.

' நானும் ஆயரும் அந்த வீட்டுக்கு இரவு 10மணிக்கு சென்றோம். படுக்கையில் இருந்த அந்த நோயாளி பெண்ணை நாடிபிடித்து பார்த்தேன். மற்ற டாக்டர்கள்கூறியபடி கொஞ்சநேரத்தில் மரணம் சம்பவிக்கும் என்று நானும் அறிந்தேன். வீட்டார் அனைவரும் சூழ்ந்திருக்க படுக்கையில் கிடந்த அந்த சகோதரியின் காதருகே பாவங்களை அறிக்கையிடும்படி கேட்டுக்கொண்டேன். இப்போதும் இந்த மரணநேரத்திலும் கர்த்தர் உங்களை மன்னித்து உங்களை தன்னிடமாய் சேர்த்துக் கொள்வார் அப்போதுதான் உங்கள் ஆத்துமாவை சந்தோஷத்தோடு கர்த்திரிடம் ஒப்படைக்க முடியும் என்றேன். 23 நாட்கள் சுயநினைவு திரும்பாத ஒரு பெண் என்றாலும் ஒருவேளை உள்உணர்வும் காதுகேட்கும் தன்மையும் இருக்குமானால் நான் கூறும் மரணவாசலின் கடைசிசெய்தியை அவளால் கேட்கமுடியுமே! என்ற எதிர்ப்பார்ப்பில் அவளிடம் கூறவேண்டியதை கூறிவிட்டு வீட்டாருக்கும் அறிவிக்கவேண்டிய மரண ஆயத்த செய்தியை அறிவித்துவிட்டு முதலில் வீட்டாரை அந்த சகோதரியின் மரணத்தை சந்திக்க ஆயத்தப்படுத்தி அவர்களுக்காகவும் ஜெபித்தேன். அதன்பின் முடிவாக அந்த பெண்ணுக்காக ஜெபித்தேன். ஜெபித்து முடிந்தபின் தலையில் என் கையை வைத்து ஜெபிக்கமுயன்ற அந்த நேரத்தில் திடீரென்று கண்விழித்து பெருத்த சத்தத்துடன் அவள் துள்ளி எழுந்து கதறினாள், ஆர்ப்பாட்டம் செய்து என்னென்னவோ பேசினாள். அந்த அமைதியான அந்த இரவில் அந்த பிராந்தியமே அதிர்ச்சிக்குள்ளானது. என்னால் தலையில் கை வைக்கமுடியவில்லை. பிள்ளைகளையும், வீட்டில் உள்ளவர்களையும் அவளை பிடித்து உட்காரவைக்க கேட்டுக்கொண்டேன். அத்தனைபேரும் அவளை இருக பிடித்துக் கொண்டார்கள். அதன்பின் நான் அவள் தலையில் கைவைத்து ஜெபித்தேன். அவளிடமிருந்த அசுத்தஆவி சத்தத்துடன் வெளியேறினது. அதன்பின் அவள் அமைதியுடன் படுத்தாள். 23 நாட்கள் கண் திறக்காது, வாய் பேசாது,ஆகாரம் சாப்பிடாது இருந்த அவளுக்கு வீட்டார் அரிசி கஞ்சி கொடுத்தார்கள் அவள் குடித்தாள். அதை கண்டு நாங்கள் தேவனைத்துதித்தோம். அதன்பின் நாங்கள் திரும்பிவிட்டோம். நாங்கள் திரும்பிய சில நிமிடத்துக்குள்ளாகவே அவள் எல்லாரிடமும் மெல்லிய சத்தத்தில் பேசியதாக அறிந்தேன். அவளுக்காக வெட்டப்பட்ட குழி இப்போதும் அப்படியே இருக்கிறது. சாவுக்கு வந்தவர்கள் எல்லாரும் அப்போதே அவரவர் ஊருக்கு திரும்பிவிட்டனர். மேலும் இரண்டு நாட்கள் என்னுடைய **கூட்டம்** அதே சபையில் நடந்தது. கடைசிநாள் **ஞாயிறு காலை திருவிருந்தை** அந்த **பெண் வீட்டுக்கு** சென்று ஆயர் அவர்கள் கொடுத்து ஜெபித்துவந்தார்.

' ஞாயிறு கூட்டம் முடித்து திங்கள் இரவு நான் **சேலம்** வந்துசேர்ந்தேன். என் மனைவிக்கு **சேலம்** அரசாங்க மருத்துவமனையிலிருந்து **மேட்டூர் டேம்** அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றலாகியதால் மேட்டூரிலேயே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து என் மனைவியும்,மகன் சாமுவேலும், 5வயது மகள் ஷீபாவும் தனியாக மேட்டூரில் குடியிருந்தனர். பிள்ளைகள் கத்தோலிக்க கான்வென்ஷல் சேர்த்து படித்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு துணைக்கு வீட்டில் யாரும் இல்லை.

# மேட்டூருக்கு வந்த பிசாசு:

கேரளா ஊழியம் முடித்து என் மனைவியையும்,பிள்ளைகளையும் பார்க்க சேலத்திலிருந்து **மேட்டூருக்கு** மோட்டார் சைக்கிளில் சென்றேன். அப்போதுதான் **வெள்ளி** இரவு மேட்டூரில் வீட்டில் நடந்த சம்பவத்தை என் மனைவி என்னிடம் விளக்கினார். வெள்ளி இரவு சுமார் 1மணிக்கு அறைக்குள் யாரோ இங்கும் அங்கும் நடப்பது போன்று என் மனைவி உணர்ந்தார். மண்ணெண்ணைய் விளக்கை கொளுத்தி,மின்சார விளக்கை ஆன் செய்தார். அறையில் வேறு யாரும் இல்லை. கதவு உள்பக்கம் பூட்டி இருந்தது. ஜன்னல் அடைக்கப்பட்டப்படியே இருந்தது. மறுபடியும் ஜெபித்து என் மனைவி படுத்துக் கொண்டார். ஒருபக்கம் மகன்,மறுபக்கம் மகள் நடுவில் என் மனைவி அன்று அங்கு கட்டில் இல்லாததால் தரையில் படுக்கைபோட்டு படுத்திருந்தார்கள். மறுபடியும் அதேபோல் அறைக்குள் ஆள் நடமாடும் சத்தம் அந்த சத்தம் என்ன என்பதைக்குறித்தும் அது அசுத்த ஆவியின் நடமாட்டம் என்பதையும் என் மனைவி ஊர்ஜிதப்படுத்தி கர்த்தரிடம் முழங்கால்படியிட்டு ஜெபிக்க தொடங்கினார். இரண்டுபக்கமும் பிள்ளைகள் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். என் மனைவி ஜெபிக்க தொடங்கிய உடனே திடீரென்று பிசாசு சத்தமாக பேசத்தொடங்கியது. **உன் படுக்கையை சுற்றியுள்ள நெருப்பை முதலில் அணை,உன் புருஷன் அங்கு என்னை விரட்டுகிறான்,**நான் எங்குபோவேன்?, இங்கு தான் படுப்பேன் என்ற அந்த சத்தம் கேட்டவுடன் என் மனைவி கண்ணை திறந்து (BED)படுக்கையை சுற்றி பார்த்தார். நெருப்பு ஏதும் இல்லை விளங்கிக்கொண்டார்!. நன்றி கர்த்தாவே, நாங்கள் தனிமையில் இல்லை நீரும்,தூதர்களும் எங்களோடு உண்டு என்று அறிந்துக்கொண்டோம் உம்மை துதிக்கிறேன். என் கணவர் உமக்காக ஊழியம் செய்கிறார். எங்களை பாதுகாக்கவேண்டியது உம் பொருப்பல்லவா!, மறுபடியும் பிசாசு எங்களை தொல்லைப்படுத்தாதபடி காத்துக்கொள்ளும் என்று ஜெபித்து முடித்ததாகவும் உடனே பிசாசு ஓடிவிட்டதாகவும் என்னிடம் சம்பவித்ததை கூறிமுடித்தார்.

700 கிலோ மீட்டர் தூரத்தில் அந்த சரோஜினி என்ற பெண்ணிடமிருந்து விரட்டப்பட்ட அசுத்த ஆவி,அதேநேரத்தில்,அதே இரவில் மேட்டூரில் என் மனைவி குடியிருந்த வீட்டில்வந்து தன் கோபத்தை என் மனைவியிடம் காட்ட முயற்சித்த சம்பவத்தைகேட்டு நாங்கள் ஜெபித்தோம். இந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தும் வண்ணம்,கடந்த மாதம் அதாவது 2015 ஏப்ரல் மாதம் 24ம் தேதி அதே கேரளத்தில் அதே **திருபுரம்** என்ற ஊரில்,அதே CSIஆலயத்தில் நடந்த கூட்டத்தில் **39வருடங்கள்** கடந்து சுகம்பெற்ற அந்த சகோதரியை பற்றி சாட்சி கூறி ஞாபகப்படுத்தினார்கள். அந்த சகோதரி அரசாங்க விவசாய பண்ணையில் டெமான்ஸ்டேட்ராக பணியாற்றி னார். அந்த சகோதரியும்,நானும் புகைப்படம் எடுத்துக்கொண் டோம். அந்த சகோதரியை அடக்கம்செய்ய அன்று வெட்டப்பட்ட குழி அப்படியே இருக்கிறது. அதையும் என்னை அழைத்து சென்று காட்டினார்கள். அன்று நடந்த அந்த **அற்புதசுகம்** இப்போது ஊரார் எல்லாராலும் பேசப்பட்டது. நானும் கர்த்தரை துதித்தேன்.



ஊழியம் செய்யும் ஊழியர்கள் சரியான ஜெபஆயத்தத்துடன் ஆவிக்குரிய தகுதியில்லாமல் ஒருவர்மேல் கைவைத்துஜெபித்தால் கட்டாயம் பிசாசு ஜெபிக்கும் ஊழியர்களையும் தாக்கும்,ஊழியர்களின் குடும்பத்தையும் தாக்கும் என்பதை நாம் மறக்கக்கூடாது. பவுல் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும்போது **ஒருவன் பேரிலும் சீக்கிரத்தில் கைகளை வைக்காதே,மற்றவர் செய்யும் பாவத்துக்கு உடன்படாதே: உன்னை சுத்தவானகக் காத்துக் கொள்** என்று கூறுகிறார்.1தீமோ 5:22. பாவம்செய்துகொண்டே துணிகரமாக சிலர் கைவைத்து ஜெபிக்க முயலுவார்கள். அவர்களுக்கு இது ஒரு எச்சரிப்பாக இருக்கட்டும். மனந்திரும்புதலின் தகுதியில்லாமல் யார்மீதும் கைவைத்து ஜெபிக்க முயலக்கூடாது. ஜாக்கிறதை. கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

# திருக்காட்டுப்பள்ளி TELC கன்வென்ஷன்




**தமிழ் இவாஞ்சிலிக்கல் லூத்தரன் சபை** (TELC) **கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. Rev.சேகர் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை மிக அருமையான செய்திருந்தார். வேத வசனத்தின்படி வாழ்வது எப்படி என்பதை ஒவ்வொரு கூட்டத்திலும் விளக்கினேன். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.**

# மதுரை மரிக்கும் வித்து மிஷனரி கன்வென்ஷன்




**மதுரை அருகே பசுமலையில்** CSI **பெண்கள் பள்ளி மைதானத்தில் நடந்த மரிக்கும் வித்து மிஷனரி கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இதன் ஸ்தாபகர் சகோ.லாயிட்ஸ் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை தங்கள் குழுவினரோடு ஜெபித்து கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். அரசரடி பைபிள்காலேஜ் முன்னாள் முதல்வர்.தேவவரம் அவர்களும்,அரசரடி தமிழ் வேதாகமகல்லூரி Rev.Dr.ஆல்பிரட் ஸ்டீபன் அவர்களும் ஒவ்வொரு நாளும் தலைமை உரையாற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.(கூட்டத்தில் நானும்,மரிக்கும் வித்து ஸ்தாபகர் சகோ.லாயிட்ஸ் அவர்களும்)கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.**

# திருநெல்வேலி CSI திருமண்டலம் CSI CHRIST CHURCH மிலிட்டரி லைன் கூட்டங்கள்



திருநெல்வேலியில் உள்ள மிலிட்டரி லைனில் அமைந்த CSI Christ Church கூட்டங்கள் அனைத்தும் இம்முறையும் மிகச் சிறப்பாக அமைந்தன. ஜாமக்காரன் வாசக குடும்பங்களையும் இம்முறை நேரில் சந்திக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது. Rev.GIPSON JOHNDAS அவர்களும் மற்ற ஆயர்களும் மிகச் சிறப்பாக ஒவ்வொரு நாளும் கூட்ட ஏற்பாடுகளை கவனித்தது பாராட்டப்படவேண்டியது. இக்கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# CSI SOUTH KERALA DIOCESE
# திருபுரம் CSI கன்வென்ஷன்



திருவனந்தபுரம் அருகே உள்ள நெய்யாற்றங்கரை பக்கத்தில் திருபுரம் CSI சபை கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இந்த சபையின் ஆயர் Rev.M.John(Dist Chairman), Rev.N.AJI அவர்களும் கூட்ட ஏற்பாடுகளை மிக அருமையான செய்திருந்தார். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

செய்திகள்! செய்திகள்!!

# செய்திகள்

## பாலியல் தொழிலுக்காக குழந்தைகளைக் கடத்தும் கும்பல்.... நிலநடுக்க நேபாளத்தில் அடுத்த அவலம்:

**காத்மாண்டு:** நிலநடுக்கம் உருக்குலைத்து ஆயிரக்கணக்கான மக்கள் பலியான நேபாளத்தில் அடிமைத் தொழிலுக்கும்,பாலியல் தொழிலுக்கும் குழந்தைகள் கடத்தப்படுவதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேற்று இமாலயத்தின் ரக்சால் எல்லைப் பகுதியில் கடத்திச்செல்லப்பட்ட 4 குழந்தைகள் மீட்கப்பட்டனர். இதையடுத்து குழந்தைகள் கடத்தலைத் தடுக்க இந்திய உளவுத்துறையுடன் இணைந்து செயல்பட உள்ளதாக எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த டைரக்டர் ஜெனரல் பி.டி.ஷர்மா தெரிவித்துள்ளார். நிலநடுக்கம் புரட்டிப்போட்ட கிராமங்களில் ஏராளமானோர் காணாமல்போயுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், ஆனால் அவர்கள் அனைவரும் கடத்தப்பட்டார்களா என்பது பற்றி தகவல் இல்லை என்றும் அவர் கூறினார். ஒருவேளை உணவுக்குக்கூட அல்லல்படும் மக்கள் தங்கள் குழந்தைகளை விற்கும் அவலமும் நேபாளத்தில் அரங்கேறிவருகிறது. ஆண்டுதோறும் குழந்தைகள் பெண்கள் என 5000லிருந்து 10000பேர் நேபாளத்திலும் அங்கிருந்து இந்தியாவிற்கும் கடத்தப்படுகிறார்கள் என்பது கூடுதல் தகவல்...

## மரண அறிவிப்பு:



ஜாமக்காரன் பத்திரிக்கையின் நீண்டகாலம் வாசகர் சகோதரி.**சுபத்ரா மார்கிரேட்** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

சகோதரி.**சுபத்ரா மார்கிரேட்** அவர்கள் தலைமை ஆசிரியையாக பணியாற்றி தனது 85வது வயதில் நவம்பர் மாதம் நல்ல ஆயத்தத்துடன் தன்னை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். இவருக்கு 6 ஆண்பிள்ளைகளும், ஒரு மகளும் உண்டு. எல்லாரையும் மிகவும் கட்டுப்பாட்டுடனும், தெய்வ பயத்திலும் வளர்த்தார்.

சென்னையில் டவுட்டன் CSI பள்ளி மைதானத்தில் நடந்த என் கூட்டத்தில் முதன்முதலாக சகோதரியை சந்தித்தேன். அதிலிருந்து சென்னையில் என் கூட்டம் எங்கு நடந்தாலும் தன் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு என்னிடம் ஜெபித்து செல்வார். அவரின் நல்ல ஆவிக்குரிய ஜீவியத்துக்காக தேவனைத் துதிக்கிறேன். கர்த்தர்தாமே அவர் பெற்ற பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் ஆறுதலை தருவாராக.


## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்:



ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஆரம்பகால வாசக குடும்பங்களில் ஒருவரான திரு. E.A.**ராஜபூஷணம்** அவர்கள் தன் 84ம் வயதில் 2014 ஆகஸ்ட் மாதம் நித்திரையடைந்தார். இவர் **பாஸ்டர்.சுந்தரம்** அவர்களின் சபையை சேர்ந்தவர். மறைந்த பாஸ்டர்.சுந்தரம் அவர்களோடு நெருக்கமான அன்புடையவர்.

சகோ.**ராஜபூஷ்ணம்** அவர்கள் விட்டுபோயிருக்கும் மனைவி, மகள் குடும்பத்தினருக்கு கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக. அவருடைய சாட்சியுள்ள ஆவிக்குரிய வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.

# CSI KARNATAKA CENTRAL DIOCESE
## NEW BISHOP



கர்நாடகா சென்ட்ரல் டையோசிஸ்ஸில் Rt.Rev.Dr.பிரசன்னகுமார் சாமுவேல் அவர்கள் புதிய பிஷப்பாக பதவி ஏற்று உள்ளார். அநேக போராட்டத்துக்குபின்தான் பிஷப்பாக பொருப்பேற்க முடிந்தது.

பணம் கொடுத்து பிஷப் பதவி பெறாத CSIயில் குறிப்பிட்ட சில பிஷப்மார்களில் இவரும் ஒருவர் என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கிறது. கர்நாடகா மாநிலத்தில் **கன்னட மொழி** பற்றுள்ளவர்கள் மிக அதிகம்உள்ள ஆயர்களில் முதல் **தமிழ்ஆயர்** கர்நாடகாவில் **பிஷப்பாக** பொருப்பேற்பது இதுவே முதல் முறையாகும். பிஷப் ஐயா அவர்களை **வாழ்த்துகிறோம்-வரவேற்கிறோம்-ஜெபிக்கிறோம்.**

**MAY 2015**

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.